
# சோதிடமலர்

## SOTHIDA MALAR



**உள்ளே..........**

- ❋ அதிஷ்ட எண் ஞானம்
- ❋ சிறைவாசம் ஏதும் உண்டா?
- ❋ ஆய்வு மன்றம்
- ❋ செவ்வாய் தோஷம்
- ❋ அபரக் கிரியைகள்
- ❋ குறுக்கெழுத்துப் போட்டி

இன்னும் பல

ரக்தாக்ஷி ஸ்ரீ ஆனி மீ (14-6-84 — 15-7-84) ரூபா: 3-00

## மணிவாசகர் ஸ்துதி

ருத்ராக்ஷ தாம பரிவேஷ சிரோருகாதி
பாதாந்த ராஜி சுகுமார முகாரவிந்தம் |
சிந்முத்ர புஸ்தகலசத் கரசவ்ய வாமம்
மாணிக்க வாக்பதி மஹம் ஸததம் பஜாமி.

*

* எண்ணெய் இல்லாது தீபம் எரியாது; அது போல கடவுள் இல்லாது மனிதன் உயிர்வாழ முடியாது.

* இறையருள் அல்லது குருவருள் கிட்டுதற்குப் பணிவும், தன்னலமின்மையும் இன்றியமையாதவை.

* வாழ்க்கையின் ரகசியம் ஆண்டவனை உண்மையாக நேசிப்பதும் பற்றற்ற சேவை செய்வதுமாகும்.

* இதயமாகிய கோவிலை அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் ஆகியவை இல்லாமல் சுத்தமாக வைத்திருந்தாலே அங்கு ஆண்டவன் எழுந்தருளுவான்.

*

## அட்டாங்க யோகம்

இயமம், நியமம், ஆசனம், பிராணுயாம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டு யோகங்களும் வெளிப்புலன்களிற் செல்லவிடாது மனத்தையடக்கி சிவரூபத்தைச் சிந்திக்க வைக்கத்தக்கன.

அகிம்சை, சத்தியம், நேர்மை, களவின்மை, பிரமச்சாரியம், பேராசையின்மை, பிறர்பொருள் விரும்பாமை என்பன இயமமாகும். நியமமாவது உள்ளும், புறமும் தூய்மை, மனமுவந்திருத்தல், தவம், தெய்வ வழிபாடு, தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்தல் முதலியன. ஆசனமாவது யோகாசனங்களில் ஒன்றை அப்பியாசம் செய்தல். பிராணுயாமமாவது பிராணனைத் தன்வயப்படுத்துதல், மூக்கின் மூலம் சுவாசித்தல் அடக்குதல், வெளிவிடுதல் ஆகியவற்றைச் சமப்படுத்துதல். பிரத்தியாகரமாவது: வெளி நோக்கிச் செல்லும் இந்திரியங்களைப் பொருட்களிலிருந்து விடுத்து உள்முகமாகத் திருப்புதல். தாரணையாவது: உள்ளேயாயினும், வெளியேயாயினும், மனதை ஒரு பொருளில் நிறுத்தி வைப்பதாம். தியாணமாவது: மனம் ஒரே நிலையடைந்து இலட்சியத்தை நோக்கி இடையீடின்றிச் செல்லல். சமாதியாவது: மனம் வேறெவற்றிலும் சம்பந்தப்படாமல் ஒடுங்கிப் பிரமத்துடன கலப்பதாகும்.

உ

# சோதிட மலர்

SOTHIDA MALAR

சோதிட மாத சஞ்சிகை

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

ரக்தாக்ஷி ஸூ ஆனி ௴
( 14 - 6 - 84 )

மலர் 7 | இதழ் 3

## உள்ளே.....................

| | | பக்கம் |
|---|---|---|
| 1 | நாள் எப்படி? ... | 2 |
| 2 | உதயலக்கினம் காணும் பதகம் ... | 4 |
| 3 | ஆனி மாதக் கிரகநிலை ... | 5 |
| 4 | கால ஹோரைகள் ... | 6 |
| 5 | ஆனி மாத வானியற்காட்சி ... | 7 |
| 6 | சந்தேக நிவிர்த்தி ... | 8 |
| 7 | இம்மாதம் உங்களுக்கு எப்படி? ... | 9 |
| 8 | அதிஷ்ட எண் ஞானம் ... | 17 |
| 9 | சிறைவாசம் ஏதும் உண்டா? ... | 19 |
| 10 | அபரக் கிரியைகள் ... | 21 |
| 11 | செவ்வாய் தோஷம் ... | 23 |
| 12 | இலங்கைச் சோதிட ஆய்வு... ... | 26 |
| 13 | ஆய்வு மன்றம் ... | 27 |
| 14 | குறுக்கெழுத்துப் போட்டி ... | 28 |

# நாள் எப்படி?

ஆனி 1 வியா (14-6-84) பிரதமை இரவு 7-41 வ. மூலம் இரவு 10-02 வரை, சித்தம். சுபகருமங்கள் செய்ய நன்று. ராகு 1-23 — 2-53

ஆனி 2 வெள் (15-6-84) துவிதியை இரவு 7-42 வ. பூராடம்-மரணம் இரவு 10-49 வரை, சுப கருமங்களைத் தவிர்க்க. ராகு 10-23 — 11-53

ஆனி 3 சனி (16-6-84) திரிதியை - மரணம் இரவு 8-17 வரை, உத்தராடம் இரவு 12-09 வரை. சுப கருமங்களை விலக்குக. ராகு 8-53—10-23

ஆனி 4 ஞா (17-6-84) சதுர்த்தி இரவு 9-26 வரை, திருவோணம்-சித்தம் பி. இ. 2-02 வரை, இரவு 9-26ன் மேல் சுபகருமங்களுக்கு நன்று.
ராகு 4-23 — 5-33

ஆனி 5 திங் (18-6-84) பஞ்சமி இரவு 11-07 வரை, அவிட்டம் பி.இ. 4-24 வரை, சித்தம். எல்லாச் சுபகருமங்களும் செய்யலாம்.
ராகு 7-24 — 8-54

ஆனி 6 செவ் (19-6-84) ஷஷ்டி பி. இ. 1-11 வரை சதயம் - மரணம் முழுவதும். நற்கருமங்களை விலக்குக. ராகு 2-54 — 4-24

ஆனி 7 புத (20-6-84) ஸப்தமி-சித்தம் பி.இ. 3-30 வரை, சதயம் காலை 7-09 வரை. அவசிய கருமங்களை காலை 7-09க்கு முன் செய்க.
ராகு 11-54 — 1-24

ஆனி 8 வியா (21-6-84) அஷ்டமி பி. இ. 5-50 வ. பூரட்டாதி பகல் 10-03 வரை, சித்தம். அசுப தினம், சுபகருமங்களுக்கு ஏற்றதன்று.
ராகு 1-24 — 2-54

ஆனி 9 வெ (22-6-84) நவமி முழுவதும், உத்தரட்டாதி பகல் 12-56 வரை, சித்தம். சுபகருமங்களைத் தவிர்க்கவும்.
ராகு 10-24—11-54

ஆனி 10 சனி (23-6-84) நவமி காலை 7-58 வரை, ரேவதி-மரணம் பி. ப. 3-34 வரை, பி. ப. 3-34ன் மேல் புதிய கருமங்கள் செய்யலாம்.
ராகு 8-55 — 10-25

ஆனி 11 ஞா (24-6-84) தசமி பகல் 9-42 வரை, அசுவினி-சித்தம் மாலை 5-46 வரை, மாலை 5-46 வரை நற்கருமங்கள் செய்யலாம்.
ராகு 4-25 — 5-55

ஆனி 12 திங் (25-6-84) ஏகாதசி - மரணம் பகல் 10-55 வரை, பரணி-சித்தம் இரவு 7-22வரை, ஸர்வ ஏகாதசி விரதம். சுபகருமங்களுக்கு ஏற்ற தினமன்று. ராகு 7-25 — 8-55

ஆனி 13 செவ் (26-6-84) துவாதசி பகல் 11-21 வ. கார்த்திகை இரவு 8-18 வரை, சித்தாமிர்தம். பிரதோஷம், கார்த்திகை விரதம். புதிய கருமங்களை விலக்குக. ராகு 2.56—4-26

ஆனி 14 புத (27-6-84) திரயோதசி பகல் 11-09வ. ரோகிணி இரவு 8-34 வரை, சித்தம். பகல் 11-09க்குள் சுபகருமங்கள் செய்யலாம்.
ராகு 11-56 — 1-26

ஆனி 15 வியா (28-6-84) சதுர்த்தசி பகல் 10-16 வரை, மிருகசீரிடம் இரவு 8-11 வரை, மரணம். அமாவாசை விரதம், சுபகருமங்களை விலக்குக.
ராகு 1-26—2-56

ஆனி 16 வெள் (29-6-84) அமாவாசை கா. 8-49 வரை, திருவாதிரை இரவு 7-16 வரை, சித்தம். அவசிய கருமங்களை இரவு 7-16க்கு மேல் செய்க.
ராகு 10-26—11-56

ஆனி 17 சனி (30-6-84) பிரதமை காலை 6-52 வ. அதன்மேல் துவிதியை-சித்தம் பின்னிரவு 4-33 வ. புனர்பூசம் மாலை 5-54 வரை, பொதுவாக எல்லாக் கருமங்களும் செய்யலாம்.
ராகு 8-56 — 10-26

ஆனி 18 ஞா (1-7-84) திரிதியை-சித்தம் இரவு 1-59 வரை, பூசம் பி. ப. 4-15 வரை, மாலை 4-15 வரை சுபகருமங்கள் செய்யலாம்.
ராகு 4-26 — 5-56

ஆனி 19 திங் (2-7-84) சதுர்த்தி இரவு 11-19 வ. ஆயிலியம் - சித்தம் பி. ப. 2-24 வரை, சதுர்த்தி விரதம். சுபகருமங்களுக்கு ஏற்ற தினமன்று.
ராகு 7-26 — 8-56

ஆனி 20 செவ் (3-7-84) பஞ்சமி இரவு 8-39 வ, மகம் பகல் 12-32 வரை, சித்தம். தோட்டத் தொழில்கள் மட்டும் செய்யலாம்,
ராகு 2-57 — 4-27

ஆனி 21 புதன் (4-7-84) ஷஷ்டி மாலை 6-05 வரை பூரம் பகல் 10-43 வரை, அமிர்தம். ஷஷ்டி விரதம், இரவு நடேசர் அபிஷேகம். பகல் 10-43ன் மேல் நற்கருமங்கள் செய்யலாம்.
ராகு 11-57 — 1-27

ஆனி 22 வியா (5-7-84) ஸப்தமி பி.ப. 3-41 வரை, உத்தரம்-மரணம் பகல் 9-04 வரை, ஆனி உத்தரம், உதயம் நடேசர் தரிசனம். பகல் 9-04 முதல் பி. ப. 3-41 வரை சுபகருமங்கள் செய்யலாம்.
ராகு 1-28 — 2-58

ஆனி 23 வெ (6-7-84) அஷ்டமி - மரணம் பகல் 1-32 வரை, அத்தம்-சித்தம் காலை 7-38 வரை, சுபகருமங்களுக்கு நன்றல்ல.
ராகு 10-28 — 11-58

ஆனி 24 சனி (7-7-84) நவமி பகல் 11-42 வரை, சித்திரை - மரணம் காலை 6-30 வரை, அதன் மேல் சுவாதி பி. இ. 5-40 வரை, பகல் 11-42ன் மேல் நற்கருமங்கள் செய்யலாம்.
ராகு 8-58 — 10-28

ஆனி 25 ஞா (8-7-84) தசமி பகல் 10-10 வரை. விசாகம் பி. இ. 5-11 வரை, மரணம். சுபகருமங்களை விலக்குக. ராகு 4-28 — 5-58

ஆனி 26 திங் (9-7-84) ஏகாதசி - மரணம் காலை 8-58 வரை, அனுஷம் பி. இ. 5-00 வரை, ஸர்வ ஏகாதசி விரதம். காலை 8-59ன் மேல் சுபகருமங்கள் செய்யலாம். ராகு 7-29 — 8-59

ஆனி 27 செவ் (10-7-84) துவாதசி காலை 8-07 வ. கேட்டை-மரணம் பி. இ. 5-12 வரை, பிரதோஷ விரதம். புதிய கருமங்களை விலக்குக.
ராகு 2-59 — 4-29

ஆனி 28 புத (11-7-84) திரயோதசி காலை 7-38வ மூலம்-மரணம் பி. இ. 5-47 வரை, அசுபதினம். நற்கருமங்களுக்கு ஏற்றதல்ல.
ராகு 12-00 — 1-30

ஆனி 29 வியா (12-7-84) சதுர்த்தசி காலை 7-32வ. பூராடம் முழுவதும், சித்தம். பூரணை விரதம், சுபகருமங்களுக்கு ஏற்றதல்ல.
ராகு 1-30 — 3-00

ஆனி 30 வெள் (13-7-84) பூரணை காலை 7-50 வ. பூராடம்-மரணம் காலை 6-46 வரை, காலை 6-46ன் மேல் சுபகருமங்கள் செய்யலாம்.
ராகு 10-30 — 12-00

ஆனி 31 சனி (14-7-84) பிரதமை காலை 8-36 வ. உத்தராடம் காலை 8-10 வரை, சித்தம் எல்லாக் கருமங்களும் செய்ய நன்று. ராகு 9-00—10-30

ஆனி 32 ஞாயி (15-7-84) துவிதீயை பகல் 9-43 வ, திருவோணம் - அமிர்தம் பகல் 10-01 வரை. அவசிய கருமங்களை பகல் 10-01 க்குள் செய்க.
ராகு 4-30 — 6-00

இம்மாத விசேடம்

## ஆனித் திருமஞ்சனம்

நிலவுலாவிய நீர்மலி வேணியன், அலகில் சோதியன் அம்பலத் தாடுபவனுகிய தில்லைத் தாண்டவ நடராஜ மூர்த்திக்கு ஒரு வருடத்தில் ஆறு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. இவற்றுள் மார்கழித் திருவாதிரையும், ஆனி உத்தரமும் கொண்டுள்ள அபிஷேக காலங்கள் மிகவும் விசேடமும் புனிதமுமுடையன. ஒரு நாளில் வைகறை, காலை, உச்சி, மாலை, இரவு, அர்த்தயாமம் என அறுவகைப் பொழுதுகள் உள்ளன. மனிதர்களுக்கு 365 நாட்கொண்ட ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாளாகும். வருடந்தோறும் இவ்வறுவகைப் பொழுதும் முறையே மார்கழி மாசி, சித்திரை, ஆனி, ஆவணி, புரட்டாதி மாதங்களை உள்ளடக்கியுள்ளன. இவற்றுள் மார்கழித் திருவாதிரையும், ஆனி உத்திரமும், சித்திரை ஓணமும் நட்சத்திரத்தை விசேடமாகக் கொண்ட அபிஷேக காலங்களாகின்றன. மற்றவை மூன்றும் திதியைச் சிறப்பாகக் கொண்டுள்ளன. இம்மாதம் 21ந் திகதி (4-7-84) இரவு நடேசர் அபிஷேகமும், 22ந் திகதி வியாழன் அதிகாலை ஆனி உத்தர தர்சனமும் நிகழும். இப் புனிதமும், மகிமையும் பொருந்திய இப்புண்ணிய தினத்தில் அம்மையப்பனை வணங்கி, அருள் பெற்றுய்வோமாக.

## பஞ்சாயதனம்

கணபதி, சூரியன், அம்பிகை, மகாவிஷ்ணு, பரமசிவன் ஆகிய ஐந்து மூர்த்திகளையும் ஒரே இடத்தில் பீடத்தில் வைத்துப் பூஜிப்பதே பஞ்சாயதன பூஜையாகும்.

சூரியனுல் உடல் ஆரோக்கியம் பெற்று, அம்பிகையால் தாயின் ஆசி கிடைக்கும் சிறந்த வாழ்வையடைந்து, விஷ்ணுவினுல் இம்மையனுபவம் பெற்று மறுமையாகிய மோக்ஷம் கிடைத்து, கோபம், காமம், குரோதம் முதலிய புறப்பகையை அஞ்ஞானத்தை சிவனுல் நீக்கி, மோக்ஷத்தை அடைவதற்கு வாழ்வில் விக்கினங்களை கணபதிப் பெருமானுல் தவிர்த்து வாழ்வின் பயனைப் பெறுவதே பஞ்சாயதனத்தின் மூலகாரணமான பயனும் சிறப்புமாகும்.

## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

### ரக்தாக்ஷி ஸ்ரீ ஆனி மீ 1-ந் தேதி முதல் 32-ந் தேதி வரை. (14-6-84 முதல் 15-7-84 வரை)

| இங் | கமி | வாரம் | மிதுன ம.மி. முதல் (காலை) | மிதுன ம.மி. வரை (காலை) | கடகம் ம. மி. வரை (காலை) | சிங்கம் ம. மி. வரை (பகல்) | கன்னி ம. மி. வரை (பகல்) | துலாம் ம. மி. வரை (பி.ப) | விருச்சி ம. மி. வரை (மாலை) | தனுசு ம. மி. வரை (இரவு) | மகரம் ம. மி. வரை (இரவு) | கும்பம் ம. மி. வரை (இரவு) | மீனம் ம. மி. வரை (பி.இ) | மேடம் ம. மி. வரை (பி.இ) | இடபம் ம. மி. வரை (பி.இ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யூன் 14 | ஆனி 1 | வியா | 5 53 | 8 06 | 10 14 | 12 15 | 2 13 | 4 17 | 6 28 | 8 36 | 10 32 | 12 17 | 1 59 | 3 49 | 5 51 |
| 15 | 2 | வெள் | 5 52 | 8 02 | 10 10 | 12 11 | 2 09 | 4 13 | 6 24 | 8 32 | 10 28 | 12 13 | 1 55 | 3 45 | 5 47 |
| 16 | 3 | சனி | 5 48 | 7 59 | 10 07 | 12 08 | 2 06 | 4 10 | 6 21 | 8 29 | 10 25 | 12 10 | 1 52 | 3 42 | 5 44 |
| 17 | 4 | ஞாயி | 5 45 | 7 55 | 10 03 | 12 04 | 2 02 | 4 06 | 6 17 | 8 25 | 10 21 | 12 06 | 1 48 | 3 38 | 5 40 |
| 18 | 5 | திங் | 5 41 | 7 51 | 9 59 | 12 00 | 1 58 | 4 02 | 6 13 | 8 21 | 10 17 | 12 02 | 1 44 | 3 34 | 5 36 |
| 19 | 6 | செவ் | 5 37 | 7 47 | 9 55 | 11 56 | 1 54 | 3 58 | 6 09 | 8 17 | 10 13 | 11 58 | 1 40 | 3 30 | 5 32 |
| 20 | 7 | புதன் | 5 33 | 7 42 | 9 50 | 11 51 | 1 49 | 3 53 | 6 04 | 8 12 | 10 08 | 11 53 | 1 35 | 3 25 | 5 27 |
| 21 | 8 | வியா | 5 28 | 7 38 | 9 46 | 11 47 | 1 45 | 3 49 | 6 00 | 8 08 | 10 04 | 11 49 | 1 31 | 3 21 | 5 23 |
| 22 | 9 | வெள் | 5 24 | 7 35 | 9 43 | 11 44 | 1 42 | 3 46 | 5 57 | 8 05 | 10 01 | 11 46 | 1 28 | 3 18 | 5 20 |
| 23 | 10 | சனி | 5 21 | 7 31 | 9 39 | 11 40 | 1 38 | 3 42 | 5 53 | 8 01 | 9 57 | 11 42 | 1 24 | 3 14 | 5 16 |
| 24 | 11 | ஞாயி | 5 17 | 7 27 | 9 35 | 11 36 | 1 34 | 3 38 | 5 49 | 7 57 | 9 53 | 11 38 | 1 20 | 3 10 | 5 12 |
| 25 | 12 | திங் | 5 13 | 7 24 | 9 32 | 11 33 | 1 31 | 3 35 | 5 46 | 7 54 | 9 50 | 11 35 | 1 17 | 3 07 | 5 09 |
| 26 | 13 | செவ் | 5 10 | 7 19 | 9 27 | 11 28 | 1 26 | 3 30 | 5 41 | 7 49 | 9 45 | 11 30 | 1 12 | 3 02 | 5 04 |
| 27 | 14 | புத | 5 05 | 7 15 | 9 23 | 11 24 | 1 22 | 3 26 | 5 37 | 7 45 | 9 41 | 11 26 | 1 08 | 2 58 | 5 00 |
| 28 | 15 | வியா | 5 01 | 7 11 | 9 19 | 11 20 | 1 18 | 3 22 | 5 33 | 7 41 | 9 37 | 11 22 | 1 04 | 2 54 | 4 56 |
| 29 | 16 | வெள் | 4 57 | 7 07 | 9 15 | 11 16 | 1 14 | 3 18 | 5 29 | 7 37 | 9 33 | 11 18 | 1 00 | 2 50 | 4 52 |
| 30 | 17 | சனி | 4 53 | 7 03 | 9 11 | 11 12 | 1 10 | 3 14 | 5 25 | 7 33 | 9 29 | 11 14 | 12 56 | 2 46 | 4 48 |
| ஜூலை 1 | 18 | ஞாயி | 4 49 | 6 59 | 9 07 | 11 08 | 1 06 | 3 10 | 5 21 | 7 29 | 9 25 | 11 10 | 12 52 | 2 42 | 4 44 |
| 2 | 19 | திங் | 4 45 | 6 55 | 9 03 | 11 04 | 1 02 | 3 06 | 5 17 | 7 25 | 9 21 | 11 06 | 12 48 | 2 38 | 4 40 |
| 3 | 20 | செவ் | 4 41 | 6 51 | 8 59 | 11 00 | 12 58 | 3 02 | 5 13 | 7 21 | 9 17 | 11 02 | 12 44 | 2 34 | 4 36 |
| 4 | 21 | புதன் | 4 37 | 6 48 | 8 56 | 10 57 | 12 55 | 2 59 | 5 10 | 7 18 | 9 14 | 10 59 | 12 41 | 2 31 | 4 32 |
| 5 | 22 | வியா | 4 33 | 6 44 | 8 52 | 10 53 | 12 51 | 2 55 | 5 06 | 7 14 | 9 10 | 10 55 | 12 37 | 2 27 | 4 28 |
| 6 | 23 | வெள் | 4 29 | 6 40 | 8 48 | 10 49 | 12 47 | 2 51 | 5 02 | 7 10 | 9 06 | 10 51 | 12 33 | 2 23 | 4 24 |
| 7 | 24 | சனி | 4 25 | 6 36 | 8 44 | 10 45 | 12 43 | 2 47 | 4 58 | 7 06 | 9 02 | 10 47 | 12 29 | 2 19 | 4 20 |
| 8 | 25 | ஞாயி | 4 21 | 6 32 | 8 40 | 10 41 | 12 39 | 2 43 | 4 54 | 7 02 | 8 58 | 10 43 | 12 25 | 2 15 | 4 16 |
| 9 | 26 | திங் | 4 17 | 6 28 | 8 36 | 10 37 | 12 35 | 2 39 | 4 50 | 6 58 | 8 54 | 10 39 | 12 21 | 2 11 | 4 12 |
| 10 | 27 | செவ் | 4 13 | 6 25 | 8 33 | 10 34 | 12 32 | 2 36 | 4 47 | 6 55 | 8 51 | 10 36 | 12 18 | 2 08 | 4 09 |
| 11 | 28 | புதன் | 4 10 | 6 21 | 8 29 | 10 30 | 12 28 | 2 32 | 4 43 | 6 51 | 8 47 | 10 32 | 12 14 | 2 04 | 4 05 |
| 12 | 29 | வியா | 4 6 | 6 16 | 8 24 | 10 25 | 12 23 | 2 27 | 4 38 | 6 46 | 8 42 | 10 27 | 12 09 | 1 59 | 4 00 |
| 13 | 30 | வெள் | 4 1 | 6 12 | 8 20 | 10 21 | 12 19 | 2 23 | 4 34 | 6 42 | 8 38 | 10 23 | 12 05 | 1 55 | 3 56 |
| 14 | 31 | சனி | 3 57 | 6 08 | 8 16 | 10 17 | 12 15 | 2 19 | 4 30 | 6 38 | 8 34 | 10 19 | 12 01 | 1 51 | 3 52 |
| 15 | 32 | ஞாயி | 3 53 | 6 04 | 8 12 | 10 13 | 12 11 | 2 15 | 4 26 | 6 34 | 8 30 | 10 15 | 11 57 | 1 47 | 3 48 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு நழற்றை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்: ஆனி 32உ (15-7-84) பகல் 11-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (10-13—12-11) கன்னிலக்னம்

# ஆனி மாதக் கிரகநிலை

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| | | புத, சுக் ராகு | ரவி |
| கும்பம் | ஆனி மாதக் கிரக நிலை | | கடகம் |
| மகரம் | | | சிங்கம். |
| குரு, நெப் | கே யூரே | குஜ சனி | |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

## கிரக மாற்றங்கள்

1உ (14-6-84) இ· 1-43க்கு மிது-சுக்
6உ (19-6-84) பி. ப. 2-08க்கு மிது-புத
20உ (3-7-84) மாலை 5-27க்கு கட-புத
26உ (9-7-84) பகல் 11-34க்கு கட-புத

8உ குஜன் வக்ரத்தியாகம்
22உ புதன் மேற்கு உதயம்
32உ சுக்கிரன் மேற்கு உதயம்
31உ சனி வக்ரத்தியாகம்
குரு, யுரேனஸ், நெப்டியூன் வக்ரத்திலேயே சஞ்சரிக்கின்றனர்,

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆனி | 2உ | (15-6-84) | பி.இ. | 5-05 | முதல் | மகரம் |
| | 5உ | (18-6-84) | பி.ப. | 3-12 | ,, | கும்பம் |
| | 7உ | (20-6-84) | பி.இ. | 3-18 | ,, | மீனம் |
| | 10உ | (23-6-84) | பகல் | 3-34 | ,, | மேடம் |
| | 12உ | (25-6-84) | இரவு | 12-42 | ,, | இடபம் |
| | 15உ | (28-6-84) | காலை | 7-33 | ,, | மிதுனம் |
| | 17உ | (30-6-84) | பகல் | 12-23 | ,, | கடகம் |
| | 19உ | (2-7-84) | பகல் | 2-24 | ,, | சிங்கம் |
| | 21உ | (4-7-84) | மாலை | 4-19 | ,, | கன்னி |
| | 23உ | (6-7-84) | இரவு | 7-04 | ,, | துலாம் |
| | 25உ | (8-7-84) | ,, | 11-17 | ,, | விருச்சிகம் |
| | 27உ | (10-7-84) | பி. இ. | 5-12 | ,, | தனுசு |
| | 30உ | (13-7-84) | பகல் | 1-04 | ,, | மகரம் |
| | 32உ | (15-7-84) | இரவு | 11-07 | ,, | கும்பம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி ஆனி மீ 32உ பகல் 11-00 மணிக்கு கன்னி லக்னம் என அறிந்து கொண்ட பின் கன்னி என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரகநிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

அரசியல் விவகாரத்தில் ஆளுனர்களுக்குள் பரஸ்பர விரோதங்கள் தோன்றும். வெளிநாட்டுத் தொடர்புகள் சற்றுப் பாதிப்படையும். நாட்டில் அமைதிக் குறைவும், அசம்பாவிதங்கள் தோன்றவும் இடமுண்டு. எனினும் பொருளாதாரத் துறையில் விருத்தியும், அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபாடும் உண்டாம்.

# நலந்தரும் கால ஹோரைகள்

**சூரிய ஹோரை:-** உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

**சந்திர ஹோரை:-** ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம். தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

**செவ்வாய் ஹோரை:-** உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

**புதன் ஹோரை:-** வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

**குரு ஹோரை:-** எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

**சுக்கிர ஹோரை:-** சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

**சனி ஹோரை:-** இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (ஆனி மாதம் 1-ந்தேதி முதல் 32-ந்தேதி வரை)

(சூரிய உதயம் 5 மணி 53 நிமிஷம்)

| வாரம் | 5...53 6...53 | 6...53 7...53 | 7...53 8...53 | 8...53 9...53 | 9...53 10...53 | 10...53 11...53 | 11...53 12...53 | 12...53 1...53 | 1...53 2...53 | 2...53 3...53 | 3...53 4...53 | 4...53 5...53 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **பகல்** | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| **இரவு** | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

**குறிப்பு:-** நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்து அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

யாழ். வானியற்கழகம்
167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வெளியீடு இல. 47

# ஆனி மாத வானியற் காட்சிகள்

# ASTRONOMICAL PHENOMENA

14-6-84 — 15-7-84

சூரியன்: 14-6-84 மாலை மணி 6-24-ல் மிதுனராசிப் பிரவேசம்
14-6-84 உதயம் காலை 5-53
அஸ்தமனம் மாலை 6-27
15-7-84 உதயம் காலை 6-00
அஸ்தமனம் மாலை 6-31

சந்திரன்: 21-6-84 அபர அஷ்டமி இரவு 5-50
29-6-84 அமாவாசை காலை 8-44
30-6-84 சந்திரதர்சனம்
6-7-84 பூர்வாஷ்டமி பகல் 1-32
13-7-84 பூரணை காலை 7-50.

புதன்: மாத ஆரம்பத்தில் அஸ்தமனமாயிருந்த இக்கிரகம் 5-7-84-ல் மேற்கில் உதயமாகும். மாதமுடிவில் சூர்யாஸ்தமனத்தின்பின் மேற்கு வானில் 21 பாகை உயரத்திற் காணப்படும். 19-6-84-ல் மிதுன ராசியிற் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: இம்மாதம் முழுவதும் அஸ்தமனமாயிருக்கும் இக்கிரகம் 15-7-84-ல் மேற்கில் உதயமாகும். அதன்பின் மாலை வெள்ளியாகக் காட்சியளிக்கும். 14-6-84-ல் மிதுனராசியிலும், 9-7-84-ல் கடகராசியிலும் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாத ஆரம்பத்தில் சூர்யாஸ்தமனமானதும் கிழக்குவானில் 38 பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் மாதமுடிவில் 67 பாகை உயரத்தில் காணப்படும். வக்கிரகதியிற் சென்று கொண்டிருந்த இக்கிரகம் 21-6-84 லிருந்து நேர்கதியிற் செல்லத்தொடங்கும். இம்மாதம் முழுவதும் துலாராசியிலேயே சஞ்சரிக்கிறது.

வியாழன்: மாத ஆரம்பத்தில் சூர்யோதயமுன் மேற்குவானில் 18 பாகை உயரத்தில் காணப்படும் இக்கிரகம் 30-6-84-ல் சூரியன் உதயமாகும் போது மேற்கில் அஸ்தமனமாகும் அதன் மேல் சூர்யாஸ்தமனத்தின் பின் கீழ் அடிவானில் தோற்றத் தொடங்கி மாதமுடிவில் சூர்யாஸ்தமனத்தின்போது கீழ்வானில் 17 பாகை உயரத்திற் காணப்படும். இம்மாதமும் வக்கிரகதியிற் சஞ்சரிக்கும் இக்கிரகம் 8-7-84-ல் தனுராசியில் மூலம் 4-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

சனி: மாத ஆரம்பத்தில் சூர்யாஸ்தமனத்தின்பின் கீழ்வானத்தில் 42 பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் மாதமுடிவில் 72 பாகை உயரத்திற் காணப்படும். வக்கிரகதியிற் சென்று கொண்டிருக்கும் இக்கிரகம் 15-6-84-ல் துலாராசியில் சுவாதி 3-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது. 14-7-84-ல் வக்கிர நிவர்த்தியாகி நேர்கதியிற் செல்லத்தொடங்கும்.

இந்திரன் (Uranus): வக்கிரகதியிற் செல்லும் இக்கிரகம் 4-7-84-ல் விருச்சிகராசியில் அனுஷம் 4-ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

வருணன் (Neptune). வக்கிரகதியில் தனுராசியில் மூலம் 2-ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

குபேரன் (Pluto): வக்கிரகதியில் துலா ராசியில் சித்திரை 4-ம் பாதத்திற் சஞ்சரிக்கும் இக்கிரகம் 11-7-84-ல் வக்கிரகதி நீங்கி நேர்கதியிற் செல்லத் தொடங்குகிறது.

### சமாகமாதிகள்

15-6-84 அதிகாலை 3½ மணிக்கு சந்திரனுக்கு வடக்கு வியாழன் 3 பாகை.

21-6-84 தக்ஷிணாயன ஆரம்பம் Summer Solstice)

3-7-84 சூரியன் பூமிக்குக் கூடியதூரத்தில் (apogee) நிற்கும்.

7-7-84 சந்திரனால் சனி இரவு 10½ மணியளவில் கிரகணமடையும்,

8-7-84 அதிகாலை 3½ மணிக்கு சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 4 பாகை. சந்திராஸ்தமனத்தின் முன் அவதானிக்கவும்.

12-7-84 அதிகாலை 4½ மணிக்கு சந்திரனுக்கு வடக்கு வியாழன் 3 பாகை.

# தமிழர் பிரச்சினை எப்போது தீரும்?

ச. சிவப்பிரகாசம், கிளிநொச்சி.

சந்: லக்கினத்தில் சுபர் இருந்தால் நல்லதென்றும், பாபர் இருந்தால் அசுபமானதென்றும் சொல்லப்படுகிறது. அனுபவத்தில் சிலவேளைகளில் முரணான பலன்கள் தென்படுகின்றன. காரணம் என்னவாக இருக்கும்?

நிவி: சுபக்கிரகங்கள், பாபக்கிரகங்களின் உண்மையான பலன்கள் லக்கினத்தைப் பொறுத்தே தீர்மானிக்கப்பட வேண்டும்.

துலாலக்கினத்திற்கு சனி(பாபி) யோககாரகன். இவர் லக்கினத்தில் உச்சமாகிறார். எனவே மிகவும் விசேடமான பலன்களைக் கொடுப்பார். வியாழன் சுபராக இருப்பினும், 3-ம் அதிபதி, 6-ம் அதிபதியானதால் துலாலக்கினத்தில் கெட்டவராகின்றார். இந்த ரீதியில் மற்றைய லக்கினங்களுக்கும் கிரகசேர்க்கைப்பலன்கள் ஆராயப்பட வேண்டும்.

சி. கணபதிப்பிள்ளை, கல்முனை.

சந்: தமிழர்களின் பிரச்சினைகள் எப்போது தீரும் எனச் சோதிட ரீதியில் ஆராயமுடியுமா?

நிவி: இராசி மண்டலத்தில் மேடராசியே இலங்கைத் தமிழர்களின் லக்னம் என அனேகர் கைக்கொள்கிறார்கள். இலங்கையின் லக்கினம் கும்பம் என்ற முறையில் 3-வது இராசி இளைய சகோதர ராசியாதலால் (வேறுசிலர் இலங்கையின் லக்னம் கன்னியென்றும் 3-வது இராசி விருச்சிகமே தமிழர் இராசியென்கிறார்கள்.) மேடராசிக்கு விருச்சிகம் அட்டமராசி என்பதால் அதில் பாபர் இருக்கும் காலங்களில் இலங்கைத்தமிழர் கடுஞ்சோதனைக்குள்ளாகியுள்ளனர்.


## சந்தேக நிவிர்த்தி "மகம்"

தற்போது கேதுவும், யுரேனசும் விருச்சிகத்தில் சஞ்சரிக்கின்றன. கேது கர்மக்கிரகம். யுரேனஸ் புரட்சிக் கிரகம். புரட்சியும், கர்மமும் இன்று தமிழர் மத்தியில் தொழிற்புரிகிறதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. 1985-ம் ஆண்டு சனி விருச்சிகத்துக்கு வருகின்றது. கேது துலாவுக்கு வருகிறது. மார்கழி மாதத்தில் இரு கிரகங்களும் விருச்சிகத்தில் சங்கமமாகின்றன. இக்காலம் ஏதும் விபரீதம் நிகழலாம். ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் செவ்வாய் மீண்டும் விருச்சிக ராசியிற் சஞ்சரிக்கும். இது ஆயுதபயத்தை உண்டாக்கும். 1986 க்கு மேல் 1987-ல் சனி விருச்சிகராசியைவிட்டு விலகும் போது குரு மீனத்தில் இருந்து விருச்சிகத்தை திருஷ்டிக்கும்போது இலங்கைத்தமிழர்க்கு சுபீட்சமான காலமாக இருக்கும்.

க. புவனேந்திரன், யாழ்ப்பாணம்.

சந்: இவ்வருட இரகுநாதையர் வாக்கியபஞ்சாங்கத்தில் 15-5-84 வைகாசி விசாகம் எனக் குறிக்கப்பட்டிருக்கின்றது. அப்பஞ்சாங்கத்தில் வைகாசி விசாகத்தை பட்சமாகக் கொண்ட கோவில் திருவிழாக்களுக்கு வைகாசி 2 (15-5-84)-ந் திகதி விசாகத்தையும் வைகாசி விசாக தினத்தில் பொங்கல் செய்யும் கோவில்களுக்கு வைகாசி 29 (11-6-84)-ந் திகதி விசாக தினத்தையும் கொள்ளப்பட்டிருக்கின்றது. வைகாசி விசாகம் ஓர் நாளில்தானே வரவேண்டும்? பொங்கலுக்கு ஒரு நாளில் வைகாசி விசாகமும், திருவிழாக்களுக்கு இன்னொரு நாளிலுமாக இரு நாட்களில் வருமா?

நிவி. "வைகாசி விசாகம்" அம்மாதத்தில் ஒரு நாளில் மட்டுமே வரவேண்டும். இம்முறை வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரம் வைகாசி 2-ந் திகதியும், வைகாசி 29-ந் திகதியும் இருக்கின்றது. அவ்வாறு ஏற்படின் பின்னதாக ஏற்படும் நட்சத்திரத்தையே கொள்ளவேண்டும் என முனிவர்களின் விதிமுறைகளில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறிருக்கையில் முனிவர்களால் அருளிச்செய்யப்பட்டதே தமது பஞ்சாங்கம் எனக் கூறிக்கொள்ளும் வாக்கிய கணிதர்கள் முனிவர்களின் கூற்றுக்கு முரணாக எப்படி வைகாசி விசாகம் கைக்கொள்கிறார்களோ தெரியவில்லை. இதைக் கண்டிக்கவோ, கேட்கவோ யாருமில்லையென்ற நோக்கில் பொங்கலுக்கு ஒரு வைகாசி விசாகமும், திருவிழாக்களுக்கு ஒரு விசாகமும் குறிக்கப்பட்டுள்ளது. திருக்கணித பஞ்சாங்கத்தில் இந்த வைகாசி விசாகம் விதிமுறைகளுக்கு ஏற்றவாறு வைகாசி 29 (11-6-84)-ந் திகதி குறிக்கப்பட்டு அன்று பொங்கல் தினமும் திருவிழாக்களும் சரிவர ஒருநாளில் குறிக்கப்பட்டுள்ளது. சைவ அனுஷ்டானங்களைச் சரிவர நிர்ணயிக்காவிடில் அதனால் ஏற்படும் பலாபலன்களும் இல்லாமற் போய்விடுமென்பதை வாக்கிய கணிதர் உணரவில்லைப்போலும். (16-ம் பக்கம் பார்க்க)




**டாக்டர் பண்டிற் கே. என். நவரத்தினம் A. F. A.**

**14-6-84 முதல் 15-7-84 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தரப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

இவ்விராசிக்காரருக்கு சூரியன் இரஜத மூர்த்தியாக 3-ல் பவனி வருவதால் இம்மாத பலன்கள் நன்மையளிப்பதாக இருக்கும். 7-ல் சனி, செவ்வாய் சேர்க்கை துன்பந்தரினும் சுக்கிர, புத, குரு சஞ்சாரங்கள் நிலைமையைச் சமாளிக்க உதவும். 9-ல் வியாழன் பொதுஜன விவகாரங்களில் நன்மதிப்பையும் செல்வாக்கையும் கொடுக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும். செலவுகள் வரவுக்கு மிஞ்சாதவாறு பாதுகாக்கலாம். முகவசீகரமும் புத்திசாதுர்யமும் நற்பலனையளிக்கும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் சுக்கிரன் 3-ல் இருப்பினும் வியாழன் திரிகோண ராசியில் சஞ்சரிப்பதால் எவ்வித பயமுமில்லை. களத்திர சுகம் பாதிப்படையினும் புத்திரசுகம் கிடைக்க வழியுண்டு.

வியாபாரிகட்கு வியாபாரம் சுமாராக நடப்பினும் மாத பிற்பகுதி பூரணலாபந் தரும். வங்கி உதவிகளுண்டு. பங்கு வியாபாரத்தில் லாபம் குறைவாயினும் பிரச்சினைகள் உருவாகாது.

உத்தியோகத்தர்கட்கு ஸ்தான பலமும், மூர்த்திபலமும் பெற்ற சூரியனால் பலவித முயற்சிகளும் வெற்றியடைய வாய்ப்புண்டு விரும்பிய மாற்றங்கள், செல்வாக்கு வளர்தல் போன்ற பலன்கள் கிடைக்க வழியுண்டு.

விவசாயிகட்கு சனி, செவ்வாய் சேர்க்கையால் லாபம் கிடையாது. விதைப்பு போன்றவற்றில் செலவுகள் அதிகமாகும். அரச மானிய உதவிகள் கிடைக்க வழியுண்டு.

தொழிலாளர்கட்கு தொழில் சீர்கேடுகள் ஓரளவிற்கு சீரடையும். சிறிதளவில் புதிய ஒப்

பந்தங்கள் கிடைக்கும். ஆயுத பயமுண்டு. கடின உழைப்பால் பழைய ஒப்பந்தங்கள் நிறைவேறும்.

மாணவர்கட்கு புதன் நற்சஞ்சாரம் செய்வதால் கல்வித் தகைமைகள் கிடைப்பதற்கு இடமுண்டு. பரீட்சைகளில் சித்தியுண்டு. விளையாட்டால் உடல் நலம் பாதிப்படையும். கலைத்துறையில் முன்னணி வகிப்பீர்கள்.

பெண்களுக்கு விவாக விடயங்களுக்கு ஏற்ற சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும் காதல் விவகாரங்களுக்கு குறைவிராது. குடும்பஸ்தர்கட்கு சுமாரான காலமாக அமையும். தொழில் பார்ப்போருக்கு எவ்வித பிரச்சனைகளுமில்லை.

அதிஷ்ட நாட்கள்: யூன் 18 பி. ப, 19, 20,
யூலை 4 பி. ப. 5,6 மு. ப.

துரதிஷ்ட நாட்கள்: யூன் 21, 22, 23 மு. ப.
யூலை 9, 10.




கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2-ம் கால்

இடபராசியினர்க்குச் சூரியன் லோக மூர்த்தியாக 2-ல் வலம் வருவதால் இம்மாதம் கஷ்டங்கள் அதிகரிக்கும். 2-ல் சுக்கிரன், புதன் பண வருவாய்க்கு உதவிசெய்யும். அட்டமத்து வியாழனும் 6-ல் செவ்வாய், சனி சேர்க்கையும் அவமானம், அவமிருத்து என்பவற்றைத் தரும். ஆரோக்கியம் பாதிப்படையும். பொது ஜனங்கள் மத்தியில் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும். இனசன கொண்டாட்டங்களுக்கு காலநிலை சாதகமாக இல்லை. எதிரிகளால் சண்டை சச்சரவுகள் ஏற்படும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானத்தில் சுபக்கிரகம் சஞ்சரிப்பதால் பணமுடை, வாக்கு கலகங்கள் ஏற்பட இடமில்லை. புத்திர தொல்லைகள், பொறுப்புகள் ஏற்படும். நற்காரியங்கள் தடைப்படுவதால் உட்பூசல்கள் தோன்றும்.

வியாபாரிகட்கு புதன் ஆட்சிபெற்று 2-ல் இருப்பினும் லாபங்கள் கிடைப்பது கஷ்டம். வங்கி உதவிகளில் பழைய முதலீடுகள் தேங்கும். கள்ள மார்க்கட்டில் கஷ்டங்கள் ஏற்படும்.

உத்தியோகத்தர்கட்கு பலமிழந்த சூரியனால் அரசியல் தொல்லைகள் உருவாகும். வேலைப்பளு அதிகரிப்பதால் மனவேதனைகள் அதிகரிக்கும். சமூக சேவையில் ஈடுபட்டோர் மேலும் கஷ்ட பலன்களையடைவர்.

விவசாயிகட்கு 6-ல் சனி, செவ்வாய் சேர்க்கை பயிர்ச்செய்கையில் அழிவைத்தரும். உழைப்பால் உடலும் உள்ளமும் சோர்வடையும். செலவுகள் அதிகரிப்பதுடன் வருவாய் குறையும்.

தொழிலாளர்கட்கு தொழில் வசதிகள் அருகும். எதிர்ப்புகள் அதிகரிக்கும். முடிவுற்ற வேலைகளால் குறைகளும் அவமரனங்களும் ஏற்பட்டு மனவேதனை அதிகமாகும்.

மாணவர்கட்கு புதன், சுக்கிரனுடன் சேர்ந்து வாக்கு ஸ்தானத்தில் பலம் பெறினும் கடும் முயற்சி இல்லையேல் சித்தியடைய முடியாது. வியாழன் பலவீனமடைவதால் உயர்கல்வியில் எவ்வித நன்மையும் ஏற்படாது.

பெண்களுக்கு விவாகப் பேச்சுக்களுக்கு இடமேயில்லை. காதல் விவகாரங்களில் அவமானம், தோல்வி என்பன ஏற்படும். ஆடம்பரமாக பணச்செலவுகளை மேற்கொள்வீர்கள்.

அதிஷ்ட நாட்கள்: யூன் 21, 22, 23 மு.ப. 26, 27.
யூலை 6 பி. ப, 7, 8.

துரதிஷ்ட ,, யூன் 14, 15, 23 பி. ப, 24, 25
யூலை 11, 12, 13 மு. ப.




மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3

இவர்களுக்குச் சூரியன் தாம்ர மூர்த்தியாக ஜன்ம ராசியில் வலம் வருவதால் கஷ்டங்களுக்கும் வேதனைகளுக்கும் குறைவில்லை. சுக்கிர, புத சஞ்சாரங்கள் தென்பூட்டுவதாக அமைந்தாலும் வரவர கஷ்டங்கள் அதிகமாகும், ரோக ஸ்தான கேது, யுரேனஸால் தீராத நோய்கள் ஏற்படலாகும். 5ல் சனி, செவ்வாய் விரக்தி மனப்பான்மையைக் கொடுக்கும், 7ல் வியாழனின் சஞ்சாரம் மட்டும் ஓரளவு மனத்திருப்தியை வழங்கும்.

குடும்பஸ்கர்கட்கு களத்திரசுகம் கிடைப்பினும் இல்வாழ்வில் மனச்சந்தோஷம் கிடையாது.

5ல் சனி செவ்வாயால் புத்திர சோகங்கள் ஏற்படலாம். பணம் கைக்கு வந்தவுடனேயே செலவாகிவிடும்,

வியாபாரிகட்கு தந்திரமாக வியாபாரம் செய்யினும் லாபங்கள் கிடைப்பதற்கில்லை. பண வசதிகளோ, வங்கி உதவிகளோ சிறிதளவிலேயே கிடைக்கும். ஆடை ஆபரண வியாபாரம் சுமாராக இயங்கும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் ஜன்ம ராசியில் பலவீனமடைவதால் எதிர்பாராத பலவித கஷ்டங்கள் ஏற்படும். நீங்கள் ஒன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று நினைப்பதாக காரியங்கள் நடக்கும். கடும் சோதனைமிக்க காலமிது.

விவசாயிகட்கு விவசாயத்தில் விருத்தியில்லை. செலவுகள் அதிகரிப்பதுடன் உழைப்பால் உடல் நலிந்து போகும். காணி வழக்குகளால் பிரச்சினைகள் வளரும்.

தொழிலாளர்கட்கு தொழில் விருத்தியில்லை; புதுத்தொழில் ஆரம்பிப்போர்க்கும் சொந்தத் தொழிலில் ஈடுபட்டோருக்கும் காலம் சாதகமாக இல்லை.

மாணவர்கட்கு கல்வியில் ஊக்கமும் உற்சாகமும் இருப்பினும் நினைத்தபடி கருமங்கள் அமையாது. கல்லூரி மாற்றம் செய்ய வேண்டிய நிலைமைகள் ஏற்படினும் சிறிது காலம் தாழ்த்துதல் நன்று.

பெண்களுக்கு விவாகப் பேச்சுக்கள் கடைசி நேரத்தில் முறிவடையும். காதல் களியாட்டங்களால் தொல்லைகள் ஏற்படும், தொழில் பார்ப்போர் முகவசீகரத்தால் நிலைமைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும்.

அதிஷ்ட நாட்கள்: யூன் 23 பி. ப, 24, 25, யூலை 9, 10.

துரதிஷ்ட நாட்கள்: யூன் 16, 17, 18 மு. ப, 26, 27 யூலை 13 பி ப, 14, 15.




புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

கடக ராசியினர்க்குச் சூரியன தாம்ர மூர்த்தியாக 12ல் வலம் வருவதால் கடந்த மாதக் கஷ்டங்கள் குறைவடையும். 4ல் செவ்வாய், சனி சுற்றுடல் அமைதியைக் கெடுக்கும். 6ல் வியாழன் உடல் ரோகங்களை சிறிது நிவிர்த்தியாக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பின் பணச்செலவுகள் கட்டுக்கடங்கும். மாதா, பிதா வழித் தொல்லைகள் குறையும். வெளிநாட்டுத் தொடர்புகளில் மனத்திருப்தியுண்டு. அந்நியர் சேர்க்கையால் லாபங்களுண்டு.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் சூரியன் மறைவு ஸ்தானத்தில் இருப்பதால் இல்வாழ்வில் நன்மைகள் ஏற்படுவதற்கில்லை. இனத்தவரிடையே மனத்தாங்கல்கள் ஏற்படலாகும்.

வியாபாரிகட்கு வங்கி உதவிகளிருப்பினும் வர்த்தக நடவடிக்கைகள் சாதகமாக அமைவதற்கில்லை. ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகமாயினும் பங்கு வியாபாரமாயினும் நன்றல்ல.

உத்தியோகத்தர்கட்கு பதவியுயர்வோ, சம்பள உயர்வோ கிடைப்பதற்கில்லை. கஷ்டப்பட்டு கடமையைச் செய்யின் சிறிது நற்பெயருண்டு; அதிகாரிகள் உங்கள் கோரிக்கைகளைக் கவனிக்க மாட்டார்கள்.

விவசாயிகட்கு 4ல் சனி காணி பூமி போன்றவற்றால் நஷ்டத்தையே தரும். விதைப்பு வேலைகளுக்கும் காலம் நன்றல்ல. தொழிலாளர் ஆதரவு சிறு மன ஆறுதலைத் தரும்.

தொழிலாளர்கட்கு தொழில் விருத்தி அதிகமில்லை. புரட்சிகர எண்ணங்களால் வேலை மாற்றங்கள் ஏற்படலாம். தொழிலகத்தில் அமைதியின்மை நிலவும்.

மாணவர்கட்கு 6ல் வியாழன் இருப்பதால் சட்டம், வர்த்தகம் சம்பந்தமான கல்வி சுமாரான முன்னேற்றம் தரும். அரச உதவிகளை எதிர்பார்ப்போருக்கு காலம் சாதகமாக இல்லை. வேலை வாய்ப்பை நாடுவோர் தொடர்ந்து கஷ்டமடைவர்.

பெண்களுக்கு விவாக முயற்சிகளுக்கு கிரகநிலை சாதகமாக இல்லை. குடும்பஸ்தர்கட்கு அமைதி குறைந்த வாழ்க்கை வாழ நேரிடும். நோய்வாய்ப்பட்டவர்கள் சிறிது முன்னேற்றமடைவர். சுக்கிரன், புதனால் மனச்சந்தோஷம் ஏற்படும்.

அதிஷ்ட நாட்கள்: யூன் 14, 15, யூலை 11, 12, 13 மு. ப.

துரதிஷ்ட நாட்கள்: யூன் 18 பி ப 19, 20. யூன் 28, 29, 30 மு. ப.



## சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசியைச் சார்ந்தோருக்குச் சூரியன் இரஜத மூர்த்தியாக 11-ல் பவனி வருவதால் இம்மாதம் சிறு நன்மைகள் ஏற்படும். இனத்தவர்களின் பொருளாதார சரீர உதவிகள் கிடைக்கும். சனி, செவ்வாய் சேர்க்கை அயலவர்களால் தொல்லைகளையும் சகோதரப் பிணக்குகளையும் கொடுக்கும். 5-ல் குரு நினைத்த கருமம் வெற்றியைக் கொடுக்கும். 10, 11-ல், சுக்கிரன், புதன் அந்தஸ்து உயர்வையும், தொழில் வளர்ச்சியையும் கொடுக்கும். ஆரோக்கியச் சிறப்புண்டு. லாபஸ்தான சூரியனால் வருவாயில் உயர்வும் அரசியல் லாபமும் உண்டு.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் புதன் பலம் பெறுவதால் எவ்வித பிரச்சனைகளையும் சுமுகமாக அணுகலாம். புத்திர சுகங்கள் கிடைக்கும். இன சன சண்டைகள் தோன்றிம்மறையும்.

வியாபாரிகட்கு புதன் லாபஸ்தானத்தில் பணவருவாய் பெருக நன்று. புது முதலீடுகளுக்கு காலம் சாதகமானது. வங்கி உதவிகளுண்டு. அழகுசாதனப் பொருட்கள் விற்பனை லாபந்தரும்.

உத்தியோகத்தர்கட்கு உத்தியோக உயர்வுக்கும் நன்மாற்றங்களுக்கும் உகந்த காலம். சகாக்களின் தொல்லைகளும் கீழ் உத்தியோகத்தரின் கரைச்சல்களும் நீங்கும்.

விவசாயிகட்கு சனி, செவ்வாயுடன் கூடுவதால் கமச்செய்கையில் எவ்வித லாபமுமில்லை. தானிய விற்பனவு கொள்வனவில் நல்லலாபமுண்டு. பண்படுத்தலில் செலவு அதிகமாகும்.

தொழிலாளர்கட்கு அரச ஒப்பந்தங்களில் மனத்திருப்தியுண்டு. புதுத்தொழில் கிடைப்பதை அயலவர் குழப்ப எத்தனிப்பர். புத்தி சாதுர்யத்தால் எல்லாவற்றையும் வெற்றிகொள்ளலாம்.

மாணவர்கட்கு புத்திக்கூர்மை நன்றாக விருப்பதால் பரீட்சைகளில் வெற்றியுண்டாகும். கலைத்துறையில் ஈடுபடுவோர்க்கு கிரகநிலைகள் மிக விசேஷமாக உதவும். உயர்கல்விப் பீடங்களில் நன்மதிப்புகள் கிடைக்கும்.

பெண்களுக்கு விவாக முயற்சிகள் மெல்ல மெல்ல கை கூடும். காதல் விவகாரங்கள் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் நிறைவேறும். குடும்பஸ்தர்கட்கு புத்திர பாக்கியங்கள் உண்டாகும். தொழில் பார்ப்போருக்கு பல விதத்திலும் முன்னேற்றமுண்டு.

அதிஷ்ட நாட்கள்: யூன் 16, 17, 18 மு.ப, 28, 29, 30 மு. ப. யூலை 13 பி.ப. 14, 15.
துரதிஷ்ட ,, யூன் 21, 22, 23 மு.ப. 30 பி.ப யூலை 1, 2 மு. ப.



## கன்னி

உத்தரம் 2, 3, 4, அத்தம், சித்திரை 1,2 கால்

இவர்களுக்குச் சூரியன் லோகமூர்த்தியாக 10ல் சஞ்சாரம் செய்வதால் இன்ப துன்பம் கலந்த பலன்கள் காணப்படும். சனி, செவ்வாய் எதிர்பாராத பணச்செலவுகளை ஏற்படுத்தும். 4-ல் வியாழன் சுற்றுடல் அமைதியைப் பேணும். 9, 10ல் சுக்கிர புத சஞ்சாரங்கள் அந்தஸ்து உயர்வு புகழ் என்பவற்றைக் கொடுக்கும். திக்பலம் பெற்ற சூரியன் காரிய விக்கினங்களை நிவிர்த்தியாக்கும். ஆரோக்கியக் குறைபாடுகள் இடையிடையே தோன்றும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பஸ்தானம் பாதிப்படைந்திருப்பதால் இல்லறசுகம் கிடைப்பதற்கில்லை. புத்திர தொல்லைகள் குறையும். நற்காரியக் கொண்டாட்டங்களை எதிர்பார்த்து மனவேதனை அடைவீர்கள்.

வியாபாரிகட்கு வியாபார வளர்ச்சி குன்றும். வியாபார அந்தஸ்தை கூட்ட பணத்தை விரயமாக்குவீர்கள். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் நல்லபடியாக நடக்கும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் 10ல் திக்பலம் பெறுவதால் அரசியல் அந்தஸ்தைப் பெறலாம். அதிகாரிகளின் தொல்லை நீங்கும். பொதுஜன தொடர்பில் நற்பெயர் வாங்குவீர்கள்.

விவசாயிகட்கு பயிர்ச்செய்கையில் எவ்வித நன்மையுமில்லை, அரச மானியங்கள் கிடைப்பினும் உடன் கைக்கு வந்து சேராது. தகராறுகள் மேலும் வளரும்.

தொழிலாளர்கட்கு தொழில் விருத்தியில்லை. தொழில் மாற்றம் செய்ய, புதுத்தொழில் ஆரம்பிக்க காலம் நன்றல்ல; கூட்டுறவில் குழப்பமேற்படும்.

மாணவர்கட்கு அதிக முன்னேற்றம் சொல்வதற்கில்லை. இருப்பினும் கல்வியில் எதுவித தடங்கலும் இல்லை. உயர்கல்வி, பிறநாட்டுக் கல்வி பயில்வோருக்கு நல்ல வாய்ப்புகளுண்டு. கல்வியில் சீர்திருத்தங்கள் செய்யலாம்.

பெண்களுக்கு விவாகப் பேச்சுக்களில் தடைகளை எதிர்நோக்குவர். காதல் விவகாரங்களில் முதியோர் அனுசரணையுண்டு. நற்காரிய கொண்டாட்டங்கள் குறைவடையும். வேலை பார்ப்போருக்கு முதலாளிகளின் தயவுண்டு.

அதிஷ்ட நாட்கள்: யூன் 18 பி.ப,19, 20, 30 பி.ப
யூலை 1, 2 மு. ப.
துரதிஷ்ட நாட்கள்: யூன் 23 பி. ப, 24, 25,
யூலை 2 பி. ப, 3, 4 மு. ப.




சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3

துலாராசியிற் பிறந்தவர்களுக்கு சூரியன் தாம்ர மூர்த்தியாக 9-ல் வலம் வருவதால் கஷ்டங்கள் அதிகரிக்கும். ஜன்மராசிச் சனியும், செவ்வாயும் உடல் உழைப்பைக் கூட்டுவதோடல்லாமல் மன விரக்தியையும் கொடுக்கும். எதிர்பாராத பணச்செலவுகள் ஏற்படும். ஆரோக்கியம் இடையிடையே பாதிப்படையும். வாக்கு கலகங்கள் தோன்றிமறையும். வியாழனின் சஞ்சாரம் சகோதர ஒற்றுமையையும் வளர்ச்சியையும் தரும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்ப ஸ்தானத்தில் பாவக் கிரகங்களிருப்பதால் இல்வாழ்வில் மகிழ்ச்சியைக் காணமுடியாது. குடும்ப தொல்லைகளைச் சமாளிப்பது கடினம்.

வியாபாரிகட்கு புதன் திரிகோணத்தில் பவனி வந்தாலும் லாபங்கள் அதிகமில்லை; வியாபாரம் மந்தக்தியில் நடைபெறும். வங்கி உதவிகள் இல்லை. கள்ள மார்க்கட் கஷ்டத்தில் மாட்டும்.

உத்தியோகத்தர்கட்கு பண விரயங்களும் தொழிலில் தவறுகளும் அதிகரிக்கும் அதிகாரிகளுடன் மனவேறுபாடு உருவாகும். கடின உழைப்பால் உடல் தளர்வடையும்.

விவசாயிகட்கு சனி, செவ்வாய் சேர்க்கையால் கஷ்ட பலன்களே அதிகரிக்கும். அயலவர்களின் தகராறு தொடர்ந்து சிக்கலைக் கொடுக்கும். அரச மானியங்கள் கிடைப்பதற்கில்லை.

தொழிலாளர்கட்கு கடின உழைப்பால் உடல் சோர்வைத் தவிர வேறெதுவும் கிடைக்காது. உழைப்பிற்குமேல் செலவுகள் அதிகரிக்கும்.

மாணவர்கட்கு புதனின் சஞ்சாரம் எத்துறைக் கல்விக்கும் உதவுவதற்கில்லை. வாக்கு வாதங்களால் கல்லூரியில் பகைமை ஏற்படும். உயர் கல்வியில் எவ்வித முன்னேற்றமுமிராது.

பெண்களுக்கு விவாகப்பேச்சுக்களில் தடை தாமதங்கள் ஏற்பட்டவண்ணமிருக்கும். காதலர்களுக்கு மிகவும் சோதனைக்குரிய காலம். குடும்பஸ்தர்க்கு கணவனின் முன்னேற்றம் தடைப்படுவதால் மனம் வேதனைப்படும்.

அதிஷ்ட நாட்கள்: யூன் 21, 22, 23 மு. ப.
யூலை 2 பி. ப. 3, 4 மு. ப.
துரதிஷ்ட ,, யூன் 26,27 யூலை 4 பி.ப.5,6 மு.ப.




விசாகம் 4 ம் கால், அனுஷம், கேட்டை

இவ்விராசியினர்க்குச் சூரியன் இரஜத மூர்த்தியாக 8-ல் வலம் வருகிறார். 12ல் சனி, செவ்வாய் அலைச்சலைக் கொடுத்து வேதனையில் ஆழ்த்தும். அட்டமத்துச் சூரியன் ஆரோக்கியத்தைக் கெடுக்கும். ஜன்மராசி யுரேனஸ் மனதில் அளவிற்கதிக சிந்தனைகளைக் கொடுத்து நிறைவேறவிடாது தடுக்கும். பொதுஜனத் தொடர்புகளில் வேதனைகள் தோன்றும். வாக்கு ஸ்தானத்தில் வியாழன் இருப்பது மட்டுமே கஷ்டங்களை நிவிர்த்தி செய்ய உதவும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பச் செலவுகளை மிகக் கஷ்டத்துடனே சமாளிக்க நேரும். 7-ல் ராகுவால் களத்திரசுகம் குறைவடையும். புத்திர சுகமும் திருப்திகரமாக இல்லை,

வியாபாரிகட்கு வியாழன் தனஸ்தானத்தில் இருப்பினும் வங்கி உதவிகளால் பலனில்லை.

அரச தலையீடுகளால் வியாபாரம் பாதிப்படையும். பங்கு வியாபாரத்தில் பல பிரச்சினைகள் தோன்றும்.

உத்தியோகத்தர்கட்கு உயர்ச்சிகள் எதனையும் எதிர்பார்க்க முடியாது. வருமானம் பற்றுக்குறையாகும். கீழ் உத்தியோகத்தர்களால் மனச் சங்கடங்கள் தோன்றும்.


விவசாயிகட்கு பயிர்ச்செய்கையில் எவ்வித இலாபமுமில்லை. கடன்கள் மேலும் அதிகரிக்கும். விதைப்பு வேலைகளில் கடுமையாகப் பாதிக்கப்படுவீர்கள்.

தொழிலாளர்கட்கு தொழில் விருத்தியடைவதற்கில்லை. கூட்டுறவில் பிளவுகள் அதிகரிக்கும். பொறுப்பெடுத்த தொழில்கள் முடிவடையக் காலம் செல்லும்.

மாணவர்கட்கு கல்வித் தகைமைகள் பெறக் காலம் சாதகமாக இல்லை. காதல் தொல்லைகளால் கல்வித்துறை பாதிப்படையும். கல்லூரிக் குழப்பங்கள் ஏற்படலாம். கலைத்துறையில் சிறப்பில்லை.

பெண்களுக்கு விவாகப் பேச்சுக்களில் எவ்வித முடிவையும் காணமுடியாது. காதல் தொடர்புகளிலும் விரக்தி மனப்பான்மை ஏற்படும். குடும்பஸ்தர்க்கு சூரியன் அட்டமத்திலிருப்பதால் கணவனின் சுகங்கள் கிடைப்பதற்கில்லை.

அதிஷ்ட நாட்கள்: யூன் 23 பி.ப, 24, 25,
யூலை 4 பி, ப, 5, 6 மு.ப.
துரதிஷ்ட நாட்கள்: யூன் 28, 29, 30 மு.ப,
யூலை 6 பி.ப, 7, 8.




மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனுராசியிற் பிறந்தவர்கட்கு சூரியன் சுவர்ண மூர்த்தியாக 7-ல் பவனி வருவதால் நற்பலன்களை அனுபவிக்க முடியும். 7-ல் சுக்கிரன், புதன், சூரியன் சஞ்சரிப்பதால் பொதுஜன தொடர்புகளில் நற்பெயரையும் புகழையும் வழங்கும். 11-ல் செவ்வாய் சனி இனத்தவர்களால் செலவினங்களை உண்டுபண்ணும். ஆரோக்கியம் சீராக இருக்கும். வெளியிடத் தொடர்புகளில் எவ்வித லாபத்தையும் காண்பதற்கில்லை. இனபந்துக்களின் தொல்லைகள் குறைவடையும்.

குடும்பஸ்தர்கட்கு 2-ம் அதிபதி சனி 11-ல் உச்சமடைவதால் கவலைப்பட எதுவுமில்லை. களத்திரசுகம் திருப்திகரமாகவிருக்கும். சேர்ந்தவர்களால் சிறு மனத்தாங்கல்கள் ஏற்படலாம்.

வியாபாரிகட்கு வியாபாரம் வளர்ச்சி பெறக்கூடிய காலம். கலைப்பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள் வியாபாரம் சிறப்பாக நடைபெறும். வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு நல்ல மவுசு ஏற்படும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் மூர்த்திபலமடைவதால் தடைப்பட்ட கருமங்கள் இடமாற்றங்கள் என்பவற்றில் சாதகமான முடிவு கிட்டலாம். மேலிடத்தில் செல்வாக்கு வளர்வதுடன் கீழிடத்தில் ஒத்துழைப்பும் நிலவும்.

விவசாயிகட்கு சிறு முயற்சியிருப்பின் விவசாயத்தில் விருத்தியைக் காணலாம். எடுத்த கருமங்களில் செலவுகள் ஏற்படலாம்.

தொழிலாளர்கட்கு பொதுஜன சம்பந்தமான கட்டிடத்தொழில்களுக்கு ஏற்ற காலம். அரச ஒப்பந்தங்களில் லாபமுண்டு. சக தொழிலாளரால் சிறு பிரச்சினைகள் தோன்றலாம்.

மாணவர்கட்கு ஜன்மராசி வியாழனல் கல்வியில் முன்னேற்றமுண்டு. கலைத்துறைக்கல்வி, சமூகக்கல்வி என்பவற்றில் நன்மையுண்டு. வெளிநாட்டுக் கல்விக்கு அரச உதவியுண்டு. காதல் எண்ணங்கள் தலைதூக்கலாம்.

பெண்களுக்கு விவாகவயதை எட்டியவர்கட்கு கணவனைக் கைப்பிடிக்க சாதகமான காலமிது. விவாகமானோர் கணவனின் முன்னேற்றத்தில் மனம் பூரிப்பர். தொழில் பார்ப்போர் சினேகிதரால் பணச்செலவுக்காளாவார்.

அதிஷ்ட நாட்கள்: யூன் 26,27, யூலை 6 பி.ப.,7,8
துரதிஷ்ட ,, யூன் 30 பி.ப., யூலை 1,2 மு.ப.9,10.




உத்தராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1, 2.

இவ்விராசிக்காரருக்குச் சூரியன் லோக மூர்த்தியாக 6-ல் சஞ்சரிப்பதால் கஷ்டங்கள் அதிகமில்லை. 6-ல் சுக்கிர, சூரிய, புத சஞ்சாரங்கள் சேவை மனப்பான்மையைத் தரும். 11ல் கேது

யுரேனஸ் சினேகிதர் உறவினரால் பணச்செலவைக் கொடுக்கும். ஆரோக்கியத்திலும் செலவுகள் அதிகமாகும். 10ல் சனி, செவ்வாய் தொழில் ரீதியில் உயர்ச்சியைக் கொடுக்க முனைந்தாலும், நடைமுறையில் எவ்வித இலாபமுமில்லை. வெளிநாட்டு விடயங்களில் எதிர்ப்புகள் உருவாகலாம்.

குடும்பஸ்தர்கட்கு குடும்பாதிபன் சனி 10ல் உச்சமடையினும் செவ்வாயுடன் கூடுவதால் அதிக நன்மைகள் இல்லை. 5ல் சுக்கிர புத சாரங்கள் விபரீதமான காதல் எண்ணங்களை கொடுத்துக் குடும்பத்தவரைக் கவலையிலாழ்த்தும்.

வியாபாரிகட்கு முதலீடுகள் தேங்குவதுடன் வியாபாரம் மந்தகதியில் நடக்கும். பங்கு வியாபாரத்தில் மேலும் பிரச்சினைகள் தோன்றும். கள்ள மார்க்கட் காரருக்கு கடுமையான சோதனை மிக்க காலமாகும்.

உத்தியோகத்தர்கட்கு சூரியன் ஸ்தானபலம் பெறுவதால் கருமங்கள் தடையின்றி நடைபெறும். பொதுஜனத் தொடர்பு உத்தியோகத்தர் நற்பெயர் வாங்குவர்.

விவசாயிகட்கு 10ல் சனி உச்சமடைவதால் கமச்செய்கையில் லாபமீட்ட போதிய உதவிகள் உண்டு. காணி, பூமி சேர்க்கைக்கு சாதகமான சூழ்நிலையில்லை.

தொழிலாளர்கட்கு அரச ஒப்பந்தங்களில் தங்கள் திறமையை வெளிப்படுத்தக்கூடியதாக இருக்கும். புதுத் தொழில் வாய்ப்புகள் குறைவு. கூட்டுறவில் ஏற்படும் இலாபத்தை தனதாக்கிக் கொள்வீர்கள்.

மாணவர்கட்கு கல்வியில் சித்தி பெறக்கூடிய அறிகுறிகள் இல்லை. விளையாட்டில் முன்னிலை வகிப்பினும் பணச்செலவும் சக்தி விரயமும் ஏற்படலாகும், காதல் விவகாரங்களால் கல்வி பாழாகலாம்.

பெண்களுக்கு காதலிலும் வெற்றியில்லை. கல்யாணத்திலும் சித்தியில்லை. இனத்தவர் உறவுகளை முறித்துக் கொள்வர். கன்னிப் பெண்களுக்கு ஆரோக்கியச் சீர்கேட்டால் இயற்கையழகு குன்றும். வேலை பார்ப்போர் குற்றச்சாட்டுக்காளாவர்.

அதிஷ்ட நாட்கள்: யூன் 28, 29, 30 மு.ப, யூலை 9, 10

துரதிஷ்ட நாட்கள்: யூன் 14, 15, யூலை 2 பி.ப, 3, 4 பி.ப, 11, 12, 13 மு.ப.



## கும்பம்

**அவிட்டம் 3, 4 சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் கால்**

இவ்விராசியில் உதித்தவர்களுக்கு சூரியன் சுவர்ண மூர்த்தியாக 5-ல் பவனி வருவதால் நற்பலன்கள் அதிகரிக்கும். 5-ல் சுக்கிர, புத சாரங்கள் நினைத்த காரிய சித்தியையும் பணவருவாயில் உயர்ச்சியையும் கொடுக்கும். 10-ல் பலம் பெற்ற கேது அந்தஸ்து உயர்வடைய வழிவகுப்பர். இனசன தொடர்புகள் மனமகிழ்வைத் தரும். ஆரோக்கியம் சீராக இருக்கும். 9-ல் சனி, செவ்வாய் வெளிநாட்டு விவகாரங்களில் சிறு தடங்கல்களைக் கொடுக்கும். சேர்ந்தோரால் திருப்திகரமான நன்மையுண்டு.

குடும்பஸ்தர்கட்கு இல்வாழ்வில் மகிழ்ச்சி நிலவும். புத்திர முன்னேற்றங்களும், நற்காரிய கொண்டாட்டங்களும் மன நிறைவைக் கொடுக்கும். களத்திர சுகங்களுண்டு.

வியாபாரிகட்கு வியாபார வளர்ச்சிக்கு மிகச் சிறந்த காலம். வங்கி உதவிகள் கிடைக்க முதலீடுகள் மேற்கொள்ள சாதகமான காலமாகும். பவுண் வியாபாரிகள் குறித்த லாபம்டைவர்.

விவசாயிகட்கு சனி 9-ல் பலமிழப்பினும் அதிக பாதிப்பில்லை. தானிய வ்கைகளில் நல்ல பணலாபமுண்டு. வழக்கு விவகாரங்களில் சாதகமான முடிவு கிட்டலாம்.

உத்தியோகத்தர்கட்கு பதவி உயர்வுகள் கிடைக்க வியாழனின் உதவியுண்டு. பணக்கஷ்டங்கள் நிவிர்த்தியடையும். அதிகாரிகளிடத்தில் செல்வாக்கு வளரும்.


தொழிலாளர்கட்கு முதலாளி, தொழிலாளி பேதங்கள் நீங்கி பரஸ்பரம் அன்பு காட்டுவர். திரிகோண ராசிச் சுக்கிரனால் கலைத்தொழில் செய்வோருக்கு நல்லவாய்ப்புகளுண்டு. புதுத் தொழில் ஆரம்பிப்பதில் நீண்டநாள் ஆசை நிறைவுறும்.

மாணவர்கட்கு சகலதுறைக் கல்வியிலும் முன்னேற்றமுண்டு. ஞாபக சக்தியும், புத்திக் கூர்மையும் வளர்ச்சியடையும். நேர்முகப்பரீட்சைகளில் திருப்திகரமான முடிவேற்படும். தொழில் தேடுவோர்க்கு வாய்ப்புகளுண்டு.

பெண்களுக்கு காதலிப்போர்களாயின் கல்யாண வாழ்வில் ஈடுபடுவர். குடும்பப் பெண்களுக்கு கணவனின் மன ஆசிகளும் பண உதவிகளும் கிடைக்கும். தொழில் பார்க்கும் பெண்கள் தங்கள் நிலையை ஸ்திரமாக்கிக் கொள்வர்.

அதிஷ்ட நாட்கள்: யூன் 14, 15, 30 பி. ப.
யூலை 1, 2மு.ப. 11, 12, 13மு.ப.

துரதிஷ்ட ,, யூன் 16, 17, 18 மு. ப.
யூலை 4 பி. ப. 5, 6 மு. ப,
13 பி. ப. 14, 15



## மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீனராசியைச் சார்ந்தோருக்கு சூரியன் 4-ல் தாம்ர மூர்த்தியாக வலம் வருவதால் கஷ்டங்கள் தொடர்ந்து ஏற்படும். 3-ல் ராகு இனசன பிரிவினைகளைக் கொடுக்கும். 4-ல் சுக்கிரன், புதன் வீடு வாசல், வாகனுதி சம்பந்தமான செலவுகளை அதிகரிக்கும். 10ல் வியாழன் நிலைமாற்றம், இடமாற்றம், தொழில் மாற்றம் என்பவற்றைக் கொடுக்கும். அட்டமத்துச் சனியும் செவ்வாயும் ஆயுள் தத்துக்களையும், ஆரோக்கியச் சீர்கேடுகளையும் கொடுக்கும். வெளி விவகாரங்களில் தொல்லைகள் தோன்றும்.

குடும்பஸ்தர்கட்கு குடும்ப நன்மைகள் கிடைப்பதற்கில்லை. அங்கத்தவரிடையே சுமுகமான உறவுகள் தென்படவில்லை. அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதவாறு பணமுடை ஏற்படும்.

வியாபாரிகட்கு முதலீடுகள் எதுவும் நன்மையளிப்பதாக இல்லை. வங்கி உதவிகளும் எதிர்பார்த்த வண்ணம் அமையாது. கொடுக்கல் வாங்கல்களில் பிரச்சினைகள் தோன்றும்.

உத்தியோகத்தர்கட்கு எவ்வித நன்மையுமில்லை. சமூகசேவையில் பொதுஜன எதிர்ப்பு வளரும். மேலிடத்தில் உங்கள் செல்வாக்கு வீழ்ச்சியடையும்.

விவசாயிகட்கு இயற்கையழிவுகள் ஒருபுறம். கள்வர் பயம் மறுபுறம். விவசாயத்தில் ஓர் சோதனைக் காலமாக மாற்றிவிடும். அழிவைத் தடுக்கும் முயற்சிகள் பலனளிக்காது

தொழிலாளர்கட்கு தொழில் சீர்கெடும். ஆயுத பயமும் மனவேதனைப்படுத்தும். தொழில் மாற்றங்கள் சாதகமாயிராது. கூட்டுறவாளர் வாய்மூடி மௌனியாக இருத்தல் நலம்.

மாணவர்கட்கு 4-ல் புத, சுக்கிர சாரங்கள் உள்ளூர்க் கல்வியில் சில தடைகளைக் கொடுக்கும். விளையாட்டுக்களால் உடல்நலம் பாதிப்படையும். கலைத்துறையில் பணம் செலவாகும்.

பெண்களுக்கு விவாக வயதை எட்டியோர்க்கு மேலும் வேதனைகள் அதிகமாகும். கன்னிப்பெண்கள் கீழ்ப்படிவின்றி தவறுகள் செய்ய முனைவர். சனி, செவ்வாய் சேர்க்கை எவ்வித நற்காரியத்தையும் நடத்தவிடாது.

அதிஷ்ட நாட்கள்; யூன் 16, 17, 18 மு. ப,
யூலை 2 பி. ப, 3, 4 மு. ப,
13 பி. ப, 14, 15.

துரதிஷ்ட நாட்கள்: யூன் 18 பி.ப, 19, 20,
யூலை 6 பி. ப, 7, 8.

---

சந்தேக நிவிர்த்தி (8-ம் பக்கத் தொடர்ச்சி)

அமிர்தகுலோசனு, மே/பா சுந்தரலிங்கம், மயிலிட்டி

சந்: 30-12-1982 மாலை 5-08 க்குப் பிறந்த பெண்ணின் கிரகநிலை, நட்சத்திரம், மகாதசை முதலியவற்றைத் தருக.

நிவி: உதயலக்னம் - மிதுனம்; நட்சத்திரம்- திருவாதிரை 3ம் பாதம்; லக்கினத்தில் சந்திரன் ராகு; 5ல் சனி; 6ல் குரு; 7ல் சூரி, சுக், கேது; 8ல் குஜன், புதன்; ராகு மகாதசையில் இருப்பு 6 வரு. 10 மா. 27 நாள்.

தி. ரா, ஜீவராணி, வெள்ளவத்தை.

சந்: 1-6-1950 காலை 6-45க்கு யாழ்ப்பாணத்தில் பிறந்த எனது ஜனன காலத்தில் என்ன மகாதசை? இருப்பு எவ்வளவு?

நிவி: நட்சத்திரம் - கேட்டை: புதன்தசை இருப்பு 7 வரு. 4 மாத. 15 நாள்.

---

குறிப்பு:- சந்தேகங்களை கேட்பவர்கள் போஸ்ட் காட்டில் மட்டும் சொந்த விலாசத்துடன் எழுதிக் குறிப்பிட்ட விலாசத்தை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும். ஒரு போஸ்காட்டில் ஒரு கேள்வி மட்டும் கேட்கலாம்.

''சந்தேக நிவிர்த்தி'' சோதிடமலர்
திருக்கணித நிலையம்
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

# அதிஷ்ட எண் ஞானம்

இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

முன் தொடர்ச்சி

**எண் 23:** பிரபல்யமாக்கும் எண்ணாகும். பெரிய திட்டங்கள் அறிவு, ஆராய்ச்சி அனுபவங்கள் இவரை பலரும் அறிந்து போற்றச்செய்யும். எதையும் துணிந்து செயற்படுத்த வேண்டும். விடா முயற்சி - உறுதியான நிலை வெற்றியைத் தரும். எதிலும் தலைமை நிலை ஏற்படும். எவரும் இவரது ஆற்றலுக்கு முன்பு போட்டி போட முடியாதவர்களாக இவர்கள் உயர்ந்துவிடுவர். படிப்படியாக பணம் செல்வாக்கு இவர்களைத் தேடி வரும். இவர்களிடம் அடிக்கடி ஏற்படும் சோம்பலை விரட்டல் வேண்டும். மொத்த வியாபாரிகள் போன்ற செயற்பாடுடைய இவர்களை தெய்வ பக்தி மேல் நிலைக்கு கொண்டு வரும். இலட்சுமி கரம் பொருந்தியவர்கள். தொட்டது துலங்கும். இவர்களிடம் மின்னோட்ட சக்தி அதிகரித்தபடி இருக்கும். எல்லாரையும் வசீகரம் செய்து வெற்றி அடைவர். மந்திர தந்திரத் தொடர்பைக்கொண்டு பிறருக்கு தீங்கு செய்யாமல் இருக்கவேண்டும்.

**எண் 32:** சமுதாயச் செல்வாக்கு ஏற்படும். தனது சுய அறிவு கொண்டு எதையும் செய்தல் வேண்டும். மற்றவர்களின் புத்திமதிப்படி செயற்படின் நிச்சயம் தோல்வி ஏற்படும். இவர்கள் காலத்திற்கு ஏற்ப எல்லோருக்கும் சிறந்த ஆலோசனை வழிகாட்டியாக இருப்பார்கள். தெய்வசக்தி மந்திரசக்தி இவர்களுடன் பிரியாமல் இருக்கும். சகடயோக வாழ்வு வாழ்வார்கள். சில நாட்கள் இன்பம் சில நாட்கள் துன்பம் ஏற்பட்டபடி இருக்கும். சமயம் சாஸ்திரத் தொடர்பு இருக்கும். பெரிய மனிதர்களுடன் தொடர்பு இருக்கும். அரசாங்கத்தில் அதி உயர்ந்த ஸ்தானங்களில் இருப்பவர்களுடன் தொடர்பு ஏற்படும். பாதரசம் போன்று பல பகுதிகளாக் சிதைவுற்றாலும் ஒன்றாகி விடும். இழந்த சக்திகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்வார்கள். வெற்றி தோல்விகளை சம நோக்குடன் பழகிவிடுவர். ஒரு கலையில் சிறப்படைவர். சுயகருத்து விடாமுயற்சி எழுத்துத்துறை, பத்திரிகைத்துறை, கமிஷன் வியாபாரம், வெளிநாட்டுத் தொடர்புத்தொழில்கள், தெய்வீகம், மந்திரம், சோதிடக் கலையில் சிறப்படைவர்.

**எண் 41:** சர்வ வசீகரம் பொருந்திய எண் ஆகும். மொத்த வியாபாரிகளைப் போன்றவர்கள். இவர்களிடம் பணப்புழக்கம் தாராளமாக வந்து போனபடி இருக்கும். அவசர அவசரமாகத் தனது காரியங்களைச் செய்தபடி இருப்பார்கள். பலரினால் வரவேற்கப்படுவார்கள். பல ஆபத்துக்களைச் சந்தித்தபடி இருப்பார்கள். ஆனால் இயற்கை இவர்களுக்கு சாதகமான வெற்றிகளைக் கொடுத்தபடி இருக்கும். எதையும் துணிவுடன் தொடங்கிவிடுவார்கள். போராடிப் போராடி புகழையும் பொருளையும் சேர்த்துவிடுவார்கள். இந்த எண்ணில் பெயர் அமைப்பவர்கள் மிக அவதானமாக தனது எண் சக்தியை அறிந்தே பெயரைவைக்க வேண்டும். கண்டபடி பெயரை அமைத்தால் உள்ளதெல்லாம் பறிகொடுத்து தரித்திரர்களாக நடுத்தெருவில் நிற்பார்கள். இந்த ஆதிக்க எண் முறையாக ஒருவருக்கு அமையுமாயின் அட்டலட்சுமி பல வெற்றிகளையும், செல்வச் செழிப்பையும் கொடுப்பாள். இவர்களுக்கு பொருத்தமான தொழில்கள் - மொத்த வியாபாரம், கமிஷன் தொடர்பான வியாபாரம், கடத்தல் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம், தங்கம், வட்டி, கடல் கப்பல் உல்லாசப் பிரயாணிகள் தொடர்பான தொழில்கள், பலசரக்கு, கணக்கு, அரசியல் என்பன சிறப்பைத் தரும்.

**எண் 50:** எல்லோருடனும் இலகுவில் நட்புக் கொண்டு விடுவார்கள். குடும்பத்தில் பிரச்சனைகள், குறைகள் இருந்தபடி இருக்கு[illegible] பரந்த அறிவு, ஆற்றல் படிப்படியாக ஏற்ப[illegible]. பொறுப்புள்ள நிறுவனங்களை நடத்தும் தகுதி ஏற்படும். எல்லாத்துறை பத்திரிகை வெளிநாட்டு, உல்லாசப்

பிரயாணத் தொடர்பு, எழுத்து, சமயம், கணக் குத் தொடர்பான தொழில்களில் சிறப்படைவர்

எண் 59: படபடப்புத் தன்மை, அமைந்திருக் கும். ஆராய்ச்சி, எழுத்துத்துறை, சமய, சாஸ்த் திரத் தொடர்பு சிறப்பைத் தரும். உயர்ந்த நோக்கமும், உழைப்பும் இருக்கும். ''முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்'' என்பது இவர் களைப் பொறுத்தளவில் மிகப்பொருத்தமான வாக் கியமாகும். மொத்த வியாபாரம், பளபளக்கும் நிறங்களையுடைய பொருட்களை வியாபாரம் செய் தல், வெளிநாட்டுத் தொடர்பான வியாபாரங் கள் செய்துவரின் அதிக இலாபமடைவர். வாத, வாயு, உஷ்ணரோகங்களால் வருந்துவார்கள். அதிக யோசனை நித்திரையின்மையால் நரம்புத்தளர்ச்சி யேற்படும். இவர்கள் அடிக்கடி கஸ்கொட்டை, முந்திரிகை வற்றல், பேரீச்சம்பழம் என்பவற்றை அடிக்கடி சாப்பிட்டுவரவும். மற்றவர்களை கோவிக்கக்கூடாது. இதனுலிவர்களது சக்தி இழந்து வரும். எனவே எல்லோருடனும் அன்பாக பண்பாக நடந்துகொள்ள வேண்டும்.

எண் 68: பெண்கள் விரும்பும் பொருட்களை வியாபாரம் செய்யலாம், தரகுத்தொழில் கல்யா ணத்தரகு உட்பட அதிஷ்டமானதாகும். குடும் பப்பிரச்சனை, பொருளாதார பலவீனம் இவர்களை துன்புறுத்தும். பெண்கள் விசயத்தில் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். கடல் சம்பந்த மான தொழில்கள், அச்சு யந்திரம், இரும்புச் சாமான்கள், மில், பண்ணை, முதலியன தொடர் பான தொழில்களால் அதிகமாக பொருளைத் தேடிக் கொள்ளலாம். தெய்வபக்தி பெரியவர் களின் உதவிகளால் உயர்ந்த நிலைகளை அடை வார்கள். அதிக அளவில் தொழில் பெருக்கம் செய்யாது சமநிலையில் உள்ளத்தைக் கொண்டு வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

எண் 77: சமய சாஸ்திர சம்பந்தமான தொடர்பு, வைத்தியம், கமிஷன், உல்லாசப்பிர யாணிகள் தொடர்பு வெற்றிதரும். பிடிவாதமும் மனச்சாட்சியும் உடைய எண்ணுகும். இவர்களை எவரும் சட்ட திட்டங்களால் கட்டுப்படுத்தக் கூடாது. தனது எண்ணப்படி எதையும் செய் வார்களாயின் வெற்றி அடைவார்கள். எந்த நேரமும் ஏதயாவது செய்து கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது தான் இவர்களுக்கு திருப்தி ஏற்படும்.

எண் 86: அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்கு மாருன தொழில், செயல்களைச் செய்து காலகதி யில் தண்டனை அடைகிருர்கள். தெய்வபக்தி, மனச்சாட்சி நம்பிக்கையைக் காப்பாற்றும் முறைகளை ஒழுங்காக கடைப்பிடிப்பார்களாயின் நிட்சயம் நல்ல பதவியை அடைவார்கள். இல்லா விடில் பலநாட் கள்வன் ஒரு நாள் பிடிபடும் நிலைமை உருவாகும். மந்திர சக்தியும் வெற்றிக்கு மேல் வெற்றியும் கொடுத்துக் கொண்டிருக்கும். நேர்மை சுய எண்ணமே இவர்களை வெற்றிப்பா தைக்கு நிட்சயம் இட்டுச் செல்லும், வாழ்க்கை யின் பிற்பகுதியே அமைதி, செல்வச் செழிப்பாக இருப்பர்.

எண் 95: ஜனவசீகரசக்தி ஏற்படும். எல்லோரும் தேடி இவரை ஓடி வருவர். உற்பத்தி ஆராய்ச்சி எழுத்துத்துறை என்பன பொருத்தமான தொழில் களாகும். மொத்த வியாபாரிகளைப் போன்றவர் கள். வெளிநாட்டுத் தொடர்பான வியாபாரம் சிறப்பைத் தரும். போக்குவரத்து சம்பந்தமான துறைகளிலும் சிறப்படைவர். ''உயிர்காப்பான் நண்பன்'' என்பது போல ஏற்றநேரத்தில் நண் பர்களின் உதவி இவர்களை தீமை, நஷ்டத்திலி ருந்து காப்பாற்றும்.

எண் 104: தொழிலிடப் பெயர் எண் 14, 23, 32, 41, 50, 59 அறிவாற்றலால் புகழ்வளரும். நிதா னமான போக்கு நிலைபெறச் செய்யும். 104 - படிப் யாக முன்னேற்றம் ஏற்படும். அறிவாற்றல் புகழ் படிவந்து சேரும். அடிக்கடி தொழிலிடத்தையோ அல்லது இருப்பிடத்தையோ மாற்றுவதால் முன் னேற்ற முடியாமல் தவிக்கிருர்கள். தமது திட் டங்களை நிதானமான போக்காக, நிலைபெறச் செய்வதில் கூடிய கவனம் தேவையாகும்.

தொழிலிடத்தின் எண் 14, 23, 32, 41, 50, 59, 77, 95 ஆக இருப்பதாலும், தொழில் பெயரை இவ்வெண்ணில் மாற்றுவதாலும் இந்த எண் அமைப்புள்ளவர்கள் முன்னேற்றம் அடைகின் ருர்கள். (தொடரும்)

முக்கியகுறிப்பு:

சோதிடமலரில் வெளியாகும் கட்டுரைகளில் வரும் கருத்துக்கள் கட்டுரையாளரின் சொந்தக் கருத் துக்களேயாகும். கட்டுரையாளர் களின் கருத்து வேறுபாடுகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்

# சிறைவாசம் ஏதாவது உண்டா?

"பவானி"

இச் சாதகர் அரசாங்கத் தொழிலில் நல்ல நிலையில் இருந்தவர். எதிர்பாராத விதத்தில் ஒரு வழக்கில் மாட்டுப்பட்டுப் போனார். 1975-ம் ஆண்டு பிற்பகுதியில் தன் சாதகத்தைக் காட்டி சிறைவாசம் ஏதும் உண்டா? என வினவினார். சாதகம் வாக்கிய முறைப்படி கணிக்கப்பட்டிருந்தது. நவாம்சமும் போட்டிருந்தார்கள். அக்காலை புதன் தசை சுக்கிர புத்தி என்றார்கள். கணிப்பு சரியில்லாதபடியால் புத்தி அந்தர நாதர்களை திட்டவட்டமாக சரியெனக் கொள்ள முடியவில்லை. ஆனாலும் கிரகங்களையும் கிரக கோசாரத்தையும் வைத்து குறைந்தது ஏழு வருடங்களுக்கு சிறைவாசம் கிடையாதெனக் கூறி விட்டேன்.

இதற்குப் பின் இச் சம்பவத்தை நான் கருத்தில் கொள்ளவில்லை. சாதகரும் பல தடவைகள் என்னை வேறு விடயங்கள் காரணமாக சந்தித்திருக்கிறார். வழக்கைப் பற்றி எதுவும் சொல்லவில்லை; நானும் விசாரிப்பதில்லை. வழக்கு விடயங்களை பரம இரகசியமாக வைத்திருந்தார்.

வருடங்கள் பல உருண்டோடி விட்டன. சென்ற மார்கழி மாதத்தில் மீண்டும் சந்தித்தார். வழக்கைப் பற்றிய கவலைகள் அவர் முகத்தில் கோடிட்டன. பாவம்! நிம்மதியில்லாமல் தவித்தார். நாளைய பொழுதைப் பற்றிய சிந்தனை நரம்பை சாகடித்துக் கொண்டிருந்தது. மதுவும் மருந்தும் பலனளிக்கவில்லை. சிறை செல்ல நேர்ந்தால் என்ன செய்வது? சாந்தியில்லாத உள்ளத்தால் எதையும் சரியாக நிர்ணயிக்க முடியவில்லை: அதனால் "சிறைவாசம் ஏதாவது உண்டா?" என்பதை தீர்மானிக்க என்னை நாடினார்.

நேரம் சுத்தி செய்து திருக்கணித முறைப்படி சாதகம் கணிக்க வேண்டியிருந்தபடியால் உடன் கவனிக்க முடியவில்லை. சாதகம் கணிப்பதற்கு வேண்டிய விபரங்களை வாங்கிய பின் வேறொரு நாள் சந்திக்கும்படி அனுப்பி வைத்தேன்

| | | | |
|---|---|---|---|
| II 28 55<br>சுக் 22 02 | சூரி 24 31<br>III 29 49 | IV 27 13<br>செ 22 44<br>புத 15 07 | V 23 35 |
| கேது 24 53<br>I 24 20<br>யுரே 24 05<br>சந் 10 21 | 9-5-1923<br>[80E 15 & 9N 50]<br>ஜனன நேரம்<br>அதிகாலை 2-22-20ம.<br>அயனாம்சம் 22° 41' | | VI 21 54<br>நெப் 22 45 |
| XII 21 54 | | | VII 24 20<br>ராகு 24 53 |
| XI 23 35 | குரு (வ)<br>0 58<br>X 27 12 | IX 29 49 | ச(வ) 21 52<br>VIII 28 55 |

பிறந்தபோது நின்ற தசை: இராகு தசை 13 வரு 10 நாள். புதன்தசை குரு புத்தி 4-6-1983 இல் ஆரம்பமாகியது.

| கிரகங்கள் | நட்சத்திராதிபதி | உபநட்சத்திராதிபதி |
|---|---|---|
| சூரியன் | சுக்கிரன் | புதன் |
| சந்திரன் | இராகு | குரு |
| செவ்வாய் | சந்திரன் | சூரியன் |
| புதன் | சந்திரன் | குரு |
| குரு (வ) | குரு | செவ்வாய் |
| சுக்கிரன் | புதன் | சூரியன் |
| சனி (வ) | சந்திரன் | சுக்கிரன் |
| இராகு | சுக்கிரன் | புதன் |
| கேது | குரு | கேது |
| நெப்ரியூன் | புதன் | சந்திரன் |
| யுறேனஸ் | குரு | புதன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2ம் பாவமுனை | — | புதன் | — | சனி |
| 3ம் பாவமுனை | — | சூரியன் | — | இராகு |
| 8ம் பாவமுனை | — | செவ்வாய் | — | சனி |
| 12ம் பாவமுனை | — | சந்திரன் | — | சுக்கிரன் |
| 10ம் பாவமுனை | — | புதன் | — | குரு |

சிறைவாசம் என்பது குடும்பத்திலிருந்து பிரிக்கப்படுவதேயாகும். அத்துடன் சுதந்திரமாக உலாவ முடியாது. தன் சொந்த இடத்தை விட்டு புதிய சூழலில் இருத்தல் வேண்டும். நான்கு சுவர்களுக்குள் வாழ்க்கை அமைந்து விடும். குடும்பத்திலிருந்து பிரிக்கப்படுவதை அசுபமடைந்த 2ம், 8ம் வீடுகள் குறிக்கின்றன. சுதந்திரத்தை இழந்து புதிய சூழலில், நான்கு சுவர்களுக்கு மத்தியில் வாழ்க்கை அமைவதை 12-ம் வீடு குறிக்கின்றது. சொந்த இடத்தை அல்லது இல்லத்தை 4-ம் வீடு குறிக்கும். இவ் வீட்டிற்கு (4-ம் வீட்டிற்கு) 12-ம் வீடாக அமைந்த 3ம் வீடு சொந்த வீட்டை விட்டு வெளியேறுவதைக் குறிக்கும். இதனுல் சிறைவாசத்தைக் கவனிக்கும்போது 2ம், 3ம், 8ம், 12ம் வீடுகள் சம்பந்தப்படல் வேண்டும். இராகு சிறைவாசத்தின் காரகன். அதனுல் சிறைவாசத்தைத் தீர்மானிக்கும்போது இராகுவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். எல்லோருடைய சாதகங்களிலும் 2ம், 3ம், 8ம், 12ம் வீடுகள் உள. அதனுல் அவர்கள் எல்லோரும் என்ருவது ஒரு நாள் சிறைவாசம் செல்வார்களா? சிலர் மட்டுமே செல்வார்கள்; மற்றவர்கள் செல்ல மாட்டார்கள். இதை எப்படித் தீர்மானிப்பது?

இதற்கு 12ம் வீட்டின் ஆரம்பமுனையை ஆராய்தல் வேண்டும். அம்முனையின் உபநட்சத்திராதிபதி 2-ம் அல்லது 3ம் அல்லது 8ம் அல்லது 12ம் வீட்டின் குறிகாட்டியாக அமைதல் வேண்டும்.

அதே வேளையில் உப நட்சத்திராதிபதி இராகுவுடன் தொடர்பு கொள்ளல் வேண்டும். அல்லது இராகு மேற்கூறிய வீடுகளின் வலிமையான குறிகாட்டியாக இருத்தல் வேண்டும். மேற்கூறிய நிபந்தனைகள் காணப்படாவிடில் சாதகர் சிறைவாசம் செய்ய மாட்டார். இச் சாதகத்தில் 12ம் வீட்டின் ஆரம்ப முனையைக் கவனிக்கவும். அது 21 பாகை 54 கலை மகரத்தில் அமைகிறது. அதாவது சனி இராசி சந்திர சாரம் சுக்கிர உப நட்சத்திரத்திலிருக்கிறது. இதனுல் 12ம் முனையின் உபநட்சத்திரம் சுக்கிரனுகும்.

புதன் சாரம் சூரிய உபநட்சத்திரத்தில் சுக்கிரன் நிற்கிருன். அதனுல் சுக்கிரன் 3ம், 8ம் (5ம்), 2ம் (7ம்) வீடுகளின் குறிகாட்டியாக அமைகிருன். சூரியனும் இராகுவும் சுக்கிர சஞ்சாரம் புதன் உப நட்சத்திரத்தில் நிற்பதால் ஒரே விதமான பலனை அளிப்பார்கள், அதனுல் இராகு 2ம் வீட்டின் குறிகாட்டியாகவும் அமைகிருன். சூரிய உபநட்சத்திரத்தில் சுக்கிரன் நிற்பதாக முன்பு அறிந்தோம். இப்போது சூரியனுக்குப் பதிலாக இராகுவைக் கொள்ளும்போது இராகு உபநட்சத்திரத்தில் சுக்கிரன் நிற்பதாகக் கருதலாம். அதனுல் சுக்கிரன் இராகுவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு விட்டான். இதனுல் சிறைவாசம் இச் சாதகருக்கு உறுதியாகிறது.

எப்போது சிறைவாசம் உண்டு...? இதற்கு 2ம், 3ம், 8ம், 12ம் வீடுகளின் குறிகாட்டிகளை ஆராய்தல் வேண்டும். சூரியன், இராகு, கேது குரு முதலியோர் 2ம் வீட்டின் குறிகாட்டிகளாம். சுக்கிரன், புதன், செவ்வாய் யாவரும் 3ம் வீட்டின் குறிகாட்டிகள். சுக்கிரன், புதன் யாவரும் 8ம் வீட்டின் குறிகாட்டிகள். சனி, சந்திரன் கேது முதலியோர் 12ம் வீட்டின் குறிகாட்டிகள். எனவே சூரியன், இராகு, கேது, குரு, சுக்கிரன் புதன், செவ்வாய், சனி, சந்திரன் யாவரும் மேற்கூறிய வீடுகளின் குறிகாட்டிகளாம். சூரியன், புதன், செவ்வாய், சந்திரன் முதலியோர் 2ம், 3ம், 12ம் வீட்டில் நிற்கிருர்கள்.

இக்கிரக உபநட்சத்திரத்தில் சுக்கிரன், சூரியன், இராகு, குரு முதலியோர் உளர். இதனுல் சுக்கிரன், சூரியன், இராகு, குரு, புதன், செவ்வாய், சந்திரன் முதலியோர் சிறைவாசத்துக்கு வலிமையான குறிகாட்டிகளாம்.

தசாபுத்தி காலங்களை அவதானிக்கும்போது 4-6-1983 தொடக்கம் 10-9-85 வரையும் புதன் தசை குரு புத்தி நடைபெறுகின்றது. சந்திர ஸ்புடத்தை வைத்து எஞ்சிய தசையை (லக்கின தசையென்பர்) கணிக்கும்போது 29-2-1983 தொடக்கம் 29-4-84 வரையும், சுக்கிர தசை செவ்வாய் புத்தியும் 29-4-1984 தொடக்கம் 29-4-1987 வரையும் சுக்கிர தசை இராகு புத்தியும் நடைபெறும்.

இதனுல் சுக்கிரன், இராகு (சூரியன்) குரு, புதன், செவ்வாய், சந்திரன் முதலிய வலிய குறிகாட்டிகளில் எஞ்சியுள்ளது சந்திரனுகும். இவன் சந்திர நாதனுக அமைவான். இதனுல் புதன் தசை குருபுத்தி புதன் அந்தரத்தில் அல்லது உதய லக்கின தசைப்படி சுக்கிர தசை செவ்வாய் புத்தி சந்திர அந்தரத்தில் சிறைவாசம் ஆரம்பமாகும்.

(வளரும்)

# அபரக் கிரியைகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சுத்தி புண்ணியாகம்: அவரவர்க்குக் குறிக்கப்பட்ட ஆசௌசநாட்கள் கழிந்ததும் வீட்டுச் சுத்திக்காகவும், ஆத்ம சுத்திக்காகவும் சுத்திபுண்ணியாகம் செய்தல் வேண்டும்.

வீட்டுக்கிருத்தியம்: இறந்தவரை உத்தேசித்து வீட்டிலே செய்யப்படும் கிரியைகளுக்கு வீட்டுக் கிருத்தியம் என்று பெயர். இதில் புண்ணியாகம் நவசிரார்த்தம், ஏகோத்ர விருத்தி, சம்ஹிதை, விருஷபம், ஏகோதிஷ்டம், மாசிகம், சபிண்டீகரணம், வைதரணீகோதானம், சோதகும்பம், ஸ்வர்க்கபாதேயம், பிண்டபூஜை என்னும் கிரியைகள் இடம்பெறும்.

நவசிராத்தம்: (நவம் - புதிது) எனவே முதலில் செய்யும் சிராத்தம் என்பது கருத்து. நவசிராத்தம் செய்வதால் பிரேதத்தன்மை நீங்குகிறது.

ஏகோத்ர விருத்தி: இந்த சிராத்தம் செய்வதால் இறந்தவருடைய பசி, தாகம், வெப்பு என்பன நீங்கிவிடுகிறது.

சம்ஹிதை: இச்சிராத்தத்தால் ஆசார ஒழுக்கத்தில் உண்டான தோஷங்கள் நிவிர்த்தியாகிறது. (ஆசார ஒழுக்கம் என்பது சிவதீட்சை பெற்றபின் அனுஷ்டானம் வழிபாடு முதலியவற்றைக் காலந்தவறாது செய்தலாகும்.)

விருஷபம் (இடபதானம்): இதற்கு எருது வஸ்திரம், தானம் என்பன வழங்கப்படுதல் முறையாகும். பைசாசரூபம் நீங்கும்பொருட்டும், சிவபெருமானுடைய அனுக்கிரகத்தைப் பெறும் பொருட்டுமாக இச்சிராத்தம் செய்யப்படுகிறது.

ஏகோதிஷ்டம்: ஆசௌசம் நீங்கிய பின் இறந்தவருடைய ஆன்ம சுத்திக்காகவும், நற்கதியடையும் பொருட்டும் செய்யப்படும் கிரியை. இக்கிரியையில் இருக்கும் ஆசாரியரை இறந்த ஆளாகப் பாவனை செய்து, அவருக்கு ஒரு ஆண்டுக்குப் போதுமான அளவு பொருட்களைத் தானமாகக் கொடுத்து, ஒரு வருடம் முடியும்வரை எதிர்ப்படாமலிருக்கச் செய்தல். தானமாகக் கொடுக்கப்படவேண்டிய பொருட்கள், உணவுப் பொருட்கள், உடை, திருநீற்றுப் பை, செபமாலை, குடை, மிதிதடி, பொன் முதலியவையாம்.

மாசிகம்: மாதந்தோறும் செய்யப்படுங் கிரியைக்கு மாசிகம் என்று பெயர். இதுவும் இறந்தவரின் பிரேதத்தன்மை நீங்கும் பொருட்டு மாதந்தோறும் செய்யப்படவேண்டிய கிரியையாகும். மாசிகமானது மாதந்தோறும் குறித்த தினத்தில் செய்யப்பட்டு வருட இறுதியில் சபிண்டீகரணம் செய்யவேண்டுமென்று விதி. ஆயினும் கிரியை செய்பவரின் அநித்தியம் கருதி எல்லா மாசிகங்களையும் ஒரே முறையில் சபிண்டீகரணம் செய்யும்பொருட்டு முன்னதாகவே செய்யப்படுகிறது. இவ்வாறு செய்யப்பட்டாலும் அந்தந்த மாதங்களில் குறிப்பிட்ட திதியில் மாசிகம் செய்யவேண்டும்.

மாசிக காலங்கள்: இறந்தநாள் முதல் 27–30 நாட்களுக்குள் செய்யப்படுவது ஊன மாசிகம். 40–45 நாட்களுக்குள் செய்யப்படுவது திரயபட்ச மாசிகம். 170–180 நாட்களுக்குள் செய்யப்படுவது ஊனஷாண் மாசிகம். 345-360 நாட்களுக்குள் செய்யப்படுவது ஊனுப்திக் மாசிகம். இது தவிர 2-ம் மாதம் முதல் 12-ம் மாதம் வரை இறந்த திதிகளில் செய்யப்படுவது திதி மாசிகம் எனப்படும்.

நாள் கணக்கில் செய்யவேண்டிய மாசிகங்களுக்கு வாராதி தோஷங்கள் இல்லாதிருக்கவேண்டும். அவையாவன: திருதியை, சதுர்த்தசி, அமாவாசை திதிகளும், வெள்ளிக்கிழமையும், கேட்டை பூரம், பூரட்டாதி, ஆயிலியம், மூலம், கார்த்திகை நட்சத்திரங்களும் விலக்கவேண்டியவையாகும். துவிதியை, ஸப்தமி, துவாதசி திதிகளுடன் கார்த்திகை, உத்தரம், உத்ராடம், புனர்பூசம் விசாகம், பூரட்டாதி நட்சத்திரங்களும், ஞாயிறு செவ்வாய், சனி வாரங்களும் சோ[illegible] திரிபுஷ்கர யோகமும் விலக்கப்பட வேண்டும்.

(தொடரும்)

# உங்களுடைய கோசர பலாபலன்கள்

## சரியாக நிகழத் தடையுண்டா என்பதைப் பின்வரும் அட்டவணையுடன் ஒப்பு நோக்கிச் சரியாகக் கணித்துப் பாருங்கள்

| கிரகங்கள் | சென்ன காலத்தில் சந்திரன் நின்ற இராசியை முதலாகக் கொண்டு எண்ணி நற்பலன் தரும் இடங்கள் | குறிப்பிட்ட கிரகம் குறிப்பிட்ட இடத்தில் சஞ்சாரம் செய்யும்போது, பலன்கள் தடைப்படாமல் நிகழக் கிரகம் நிற்கும் இடத்தில் இருந்து சுத்தமாக இருக்க வேண்டிய இடங்கள். |
|---|---|---|
| சூரியன் | 3ம், 6ம், 10ம், 11ம் இடங்கள் சுபபலன் | 9ம், 12ம், 4ம், 5ம் இடங்கள் சுத்தமாக |
| சந்திரன் | 1ம், 3ம், 6ம், 7ம், 10ம் 11ம் இடங்கள் சுபபலன் | 8ம், 9ம், 12ம், 2ம், 4ம், 5ம் இடங்கள் சுத்தமாக |
| செவ்வாய், சனி ராகு, கேது | 3ம், 6ம், 11ம் இடங்கள் சுப பலன் | 12ம், 5ம், 9ம் இடங்கள் சுத்தமாக |
| புதன் | 8ம், 2ம், 10ம், 11ம், 6ம் இடங்கள் சுபபலன் | 1ம், 5ம், 8ம், 12ம், 9ம் இடங்கள் சுத்தமாக |
| குரு | 7ம், 5ம், 11ம், 2ம், 9ம் இடங்கள் சுபபலன் | 3ம், 4ம், 8ம், 12ம், 10ம் இடங்கள் சுத்தமாக |
| சுக்கிரன் | 1ம், 2ம், 3ம், 4ம் 5ம், 8ம், 9ம், 11ம், 12ம் இடங்கள் சுபபலன் | 6ம், 3ம், 10ம், 9ம், 5ம், 1ம் இடங்கள் சுத்தமாக |

உதாரணம்: மிதுன இராசி சந்திர இராசியாயின் — குருவின் கோசரத்தை நோக்கின் தற்காலம் குரு தனுவில் சஞ்சரிக்கின்றார். மிதுனத்துக்குத் தனு 7ம் இடம் சுப பலனுக்குரியது என்றாலும், சுபபலன்கள் நிகழத் தனுவுக்கு 3ம் இடமான கும்பத்திலும், 4ம் இடமான மீனத்திலும், 8ம் இடமான கடகத்திலும், 10ம் இடமான கன்னியிலும் 12ம் இடமான விருச்சிகத்திலும் வேறு கிரகசஞ்சாரம் இன்றிச் சுத்தமாக இருக்க வேண்டும். இப்படியே மற்றக் கிரகங்களின் கோசர பலனும் அமையும்.

கோசரத்திலும் 1ல்சனி, 2ல் கேது, 3ல் குரு, 4ல் புதன், 5ல் சூரியன், 6ல் சுக்கிரன், 7ல் செவ்வாய், 8ல் சந்திரன் 9-ல் இராகு வரும்போது குரூர கோசர காலம் எனவும் வருணிக்கப்படுகின்றது.

குமாரசுவாமியத்திலிருந்து தொகுப்பு — இ. கந்தையா, கரம்பன்.


அடுத்த இதழில்

சோதிடர் மு. மு. மார்க்கண்டு அவர்கள் எழுதிய

**"நட்சத்திர ரீதியில் எண்கள்"**

எண் சோதிடத்தில் முற்றிலும் புதிய முறையில் நட்சத்திர ராசியடிப்படையில் எண்கள் கொடுக்கப்பட்டு அதற்கான விளக்கங்களும் அளிக்கப்பட்டுள்ளது.

வாசிக்கத் தவறாதீர்கள்!

# செவ்வாய் தோஷம்

வே. சின்னத்துரை, நல்லூர்.

(சென்ற இதழ் தொடர்)

| | | | |
|---|---|---|---|
| ச, சந், ல | | கே, வெ | |
| | ஆண் | | சூரி, |
| | | | பு |
| வியா | ரா,செ | | |

லக்னம் மீனம் செவ்வாய் விருச்சிகம் 9ல்
சந்திரன் மீனம் ,, 9ல்
வெள்ளி இடபம் ,, 7ல்

இங்கு 7ல் செவ்வாய் குற்றம் விதிவிலக்கு 1 ஆல் நீக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| சனி | கே | | |
| வியா | பெண் | | ல, |
| சந் | | | செ, பு, சூ |
| | | ரா, வெ, | |

லக்னம் கர்க்கடகம் செவ்வாய் சிங்கம் 2ல்
சந்திரன் மகரம் ,, 8ல்
வெள்ளி துலாம் ,, 11ல்

இங்கு இரு செவ்வாய் குற்றமும் விதிவிலக்கு 2ஆல் நீக்கப்பட்டது.

இச்சோடி சகல சம்பத்துடனும் இப்போ 16 வருடமாக நல்வாழ்வு வாழ்கிறார்கள்.

| | | | |
|---|---|---|---|
| | சனி | ரா, சந் | வெ |
| | ஆண் | | ல,சூ,பு |
| | | | செ |
| | கே | | வியா |

லக்னம் கர்க்கடகம் செவ்வாய் சிங்கம் 2ல்
சந்திரன் இடபம் ,, 4ல்
வெள்ளி மிதுனம் ,, 3ல்

இங்கு இரு செவ்வாய் குற்றமும் விதிவிலக்கு 2 ஆல் நீக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | பெண் | | ரா |
| வெ.கேவி | | | |
| | புத, சூ | சனி,ல,செ | சந் |

லக்னம் துலாம் செவ்வாய் துலாம் 1ல்
சந்திரன் கன்னி ,, 2ல்
வெள்ளி மகரம் ,, 9ல்

இங்கு இரு செவ்வாய் குற்றமும் விதிவிலக்கு 6ஆல் நீக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | சந், ல | | வி |
| சனி,பு,சூ | ஆண் | | ரா |
| கே | | | |
| வெ | செ | | |

லக்னம் மேடம் செவ்வாய் விருச்சிகம் 8ல்
சந்திரன் மேடம் ,, 8ல்
வெள்ளி தனு ,, 12ல்

இங்கு 3 செவ்வாய்க் குற்றங்களும் விதி விலக்கு 1ஆல் நீக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | ரா | செ | வி,பு,சூ |
| | பெண் | | |
| சந் | | | வெ |
| சனி | | ல, கே | |

லக்னம் துலாம் செவ்வாய் இடபம் 8ல்
சந்திரன் மகரம் ,, 5ல்
வெள்ளி சிங்கம் ,, 10ல்

இங்கு 8ல் செவ்வாய் குற்றம் விதிவிலக்கு 9ல் நீக்கப்பட்டது.

விவாகமாகி 26 வருட காலத்துக்கு மேலாக சகல சௌபாக்கியங்களுடனும் வாழ்ந்தார்கள். அண்மையில்தான் முதுமையினால் கணவன் மரணமானார்.

| | | | |
|---|---|---|---|
| | ல | சந், செ | வெ |
| சனி | ஆண் | | சூ. பு,கே |
| ரா | | | |
| | | | வி |

லக்னம் மேடம் செவ்வாய் இடபம் 2ல்
சந்திரன் இடபம் ,, 1ல்
வெள்ளி மிதுனம் ,, 12ல்

இங்கு 3 செவ்வாய் குற்றமும் விதிவிலக்கு 8ல் நீக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| கே | வி, சனி, பு | சூ | செ, வெ |
| | பெண் | | |
| | | | ல |
| | | | சந், ராகு |

லக்னம் சிங்கம் செவ்வாய் மிதுனம் 11ல்
சந்திரன் கன்னி ,, 10ல்
வெள்ளி மிதுனம் ,, 1ல்

இங்கு 1ல் செவ்வாய் குற்றம் 7ம் விதிவிலக்கால் நீக்கப்பட்டது.

இவர்கள் நல்ல சுமுகமான வாழ்வு வாழ்கிறார்கள்.

| | | | |
|---|---|---|---|
| கே | | சந் | |
| | ஆண் | | |
| | | | ல |
| செ | வெ | வி, பு | சூ, சனி, ரா |

லக்னம் சிங்கம் செவ்வாய் தனு 5ல்
சந்திரன் இடபம் ,, 8ல்
வெள்ளி விருச்சிகம் ,, 2ல்

இங்கு 8ல் செவ்வாய்க்குற்றம் விதிவிலக்கு 5 ஆல் நீக்கப்பட்டது. 2ல் செவ்வாய்க் குற்றம் ஒரு விதத்திலும் நீக்கப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| வி | சனி, கே, வெ, ல | பு, சூ | |
| | பெண் | | |
| செ | | | |
| | | ரா, சந் | |

லக்னம் மேடம் செவ்வாய் மகரம் 9ல்
சந்திரன் துலாம் ,, 4ல்
வெள்ளி மேடம் ,, 10ல்

இங்கு 4ல் செவ்வாய்க்குற்றம் விதிவிலக்கு 2ஆல் நீக்கப்பட்டது.

இச்சோடியின் வாழ்வில் ஆணின் வெள்ளியில் நின்ற 2ல் செவ்வாய் தோஷ நீக்கம் பெருமையும் இவரை கொஞ்ச கால வாழ்க்கைக்குள் அகால மரணத்திற்குள்ளாக்கியது. பெண் இப்பவும் 3 குழந்தைகளுடன் விதவையாக வாழ்கிறார்.

| | | | |
|---|---|---|---|
| சனி | | கே | |
| | ஆண் | | |
| | | | சந், வெ |
| வி செ | ல, ரா | | சூ |

லக்னம் விருச்சிகம் செவ்வாய் தனு 2ல்
சந்திரன் சி[illegible]கம் ,, 5ல்
வெள்ளி [illegible]ம் ,, 5ல்

இங்கு 2[illegible]செவ்வாய்க்குற்றம் விதிவிலக்கு 9ல் நீக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| வியா | சனி, ச, கே | | |
| | பெண் | | |
| செ | | | [illegible] |
| | | ரா, ல | வெ, பு, சூ |

லக்னம் துலாம் செவ்வாய் மகரம் 4ல்
சந்திரன் மேடம் ,, 10ல்
வெள்ளி கன்னி ,, 5ல்

இங்கு 4ல் செவ்வாய் குற்றம் விதிவிலக்கு 2ஆல் நீக்கப்பட்டது.

இச்சோடி இற்றைக்கு 20 வருடத்திற்கு மேல் சகல சௌபாக்கியங்களுடனும் சீவிக்கிறார்கள்.

| | | | |
|---|---|---|---|
| ரா | பு, வெ | சனி, சூ | சந் |
| ல | ஆண் | | செ |
| | | | |
| | வி | | கே |

லக்னம் கும்பம் செவ்வாய் கடகம் 6ல்
சந்திரன் மிதுனம் ,, 2ல்
வெள்ளி மேடம் ,, 4ல்

இங்கு செவ்வாய்க் குற்றமும் விதிவிலக்கு 2ஆல் நீக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| சூ | கே | | ல |
| பு, வெ | பெண் | | வி |
| | | | சனி, சந் |
| | | ரா, செ | |

லக்னம் மிதுனம் செவ்வாய் துலாம் 5ல்
சந்திரன் சிங்கம் ,, 3ல்
வெள்ளி கும்பம் ,, 9ல்

இங்கு செவ்வாய் தோஷமே கிடையாது. இது ஒரு சுத்த ஜாதகமாகும். இவர்கள் 40 வருடத்திற்கு மேலாக சகல சம்பத்துடனும் வாழ்கிறார்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி |
| ரா | ஆண் | | வெ, பு |
| சனி | | | கே, வி |
| | | சந் | செ, ல |

லக்னம் கன்னி செவ்வாய் கன்னி 1ல்
சந்திரன் துலாம் ,, 12ல்
வெள்ளி கர்க்கடகம் ,, 3ல்

இங்கு 12ல் செவ்வாய் விதிவிலக்கு 3 ஆலும், 1ல் செவ்வாய் விதிவிலக்கு 10ஆலும் நீக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | | | கே |
| சந்,ல,சனி | பெண் | | |
| செ | | | |
| பு,ரா,சூரி | வி, வெ | | |

லக்னம் கும்பம் செவ்வாய் மகரம் 12ல்
சந்திரன் கும்பம் ,, 12ல்
வெள்ளி விருச்சிகம் ,, 3ல்

இங்கு இரு செவ்வாய்க் குற்றமும் விதி விலக்கு 2 ஆல் நீக்கப்பட்டது.

இச்சோடி இற்றைக்கு 20 வருடங்களுக்கு மேலாக நல்ல தாம்பத்திய வாழ்வை சகல சம்பந்தத்துடனும் நடத்துகிறார்கள். (முற்றும்)

## உலக வாழ்க்கை

இவ்வுலகில் தோன்றிய ஒவ்வோர் மனிதனும் துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தையடைய விரும்புகிறான். கல்வி கேள்வி முற்றிய சான்றோர்கள் பரிபூரண இன்பத்தையே ஆனந்தம் எனக் கண்டனர். நாம் அடைய இருக்கும் அவ்வானந்தம் எம்மாலே எமக்குள்ளே விளைவிக்கப்பட வேண்டியதாகும்.

ஆன்மா ஆனந்தமயமானது, வியாபகமானது. ஆனால் அந்த நிலையை மறைத்துக் கொண்டு ஆணவம் நிற்கிறது. நீரை மூடிய பாசிபோல இவ்வாணவம் விளங்குகிறது. இறைவனை ஒன்றி நினைப்பவர்க்கு இப் பாசியாகிய இருள் நீங்க வாய்ப்புண்டாகிறது. பாசி பிடித்த இடங்களில் வழுக்கல் ஏற்படுவதியல்பு. அதே போல் ஆணவம் படிந்துள்ள உள்ளத்தில் இறைவனுடைய திருவடி பதியாது வழுக்கிவிடும். ஆணவம் முதலிய அசுர சம்பத்துக்கள் இறையுணர்வையும் இறை வாழ்வையும் தடுப்பன. இறைவனோடிசைந்த இன்பமுடையோர் அசுர சக்தியை வென்று செம்பொருட் சக்தியை உணர்த்தி வீடு பேறடைந்துள்ளனர் என்பதைப் புராண இதிகாச வாயிலாக உணர்த்தியுள்ளனர்.

''அந்தமில் ஞானி அருளை யடைந்தக் கால்
அந்தவுடன் தான்குகை செய்திருத்திடில்
சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோரும்
அந்தமில் இன்ப அருள் பெறுவாரே''

— செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி

## கடக இலக்கின ஆணும் இடப இலக்கினப் பெண்ணும் சேர்வதால் ஏற்படும் பலா பலன்கள்

வே. சின்னத்துரை - நல்லூர்

தனது வாழ்வில் மிக முக்கியமான பொருள் அவள்தான் என்பதை அவளுக்கு உணர்த்துவார். ஏனெனில் அவளது சகல குணாதிசயங்களையும் அறிந்து கொள்ள அவர் ஆசைப்படுவார். அதே போல் அவளும் ஆசைப்பட வேண்டுமென்பதை அவர் எதிர்பார்ப்பார்; வீட்டுக் காரியங்களில் உணர்ச்சி வேகம் இருவரிலும் மிகையாகக் காணும். அதிக நேரமும் பிரயத்தனமும் இதிலே (வீட்டு வேலைகளில்) செலவழிக்கப்படும். அவள் செயற்பாடுகளை இவர் உடனடியாக ஏற்கமாட்டார்; இதை அவளும் மெச்சுவாள். ஆனால் அவள் ஒரு கனவு காணும் பேர்வழி. எப்போதும் அவளை உயர்நிலையில் வைக்கவும், அவரிடமிருந்து தாராள தன்மையையும், சுயநலமின்மையையும் எதிர்பார்ப்பார். அவளுடைய பிழைகள் வெளித் தெரிந்தால் தன்னை அவள் கைவிட்டாள் என்று அவர் ஒடுங்கிப் போவார். உலகிலே இடபப் பெண்கள் மிகவும் சமயத்திற்கேற்ற சாதுரியமுள்ளவர்களல்லர். அவரை அரைகுறையாகத் திருப்திப்படுத்த முயல்வாளேல் அவர் இன்னும் கூடுதலாக ஒடுங்குவார். அவருக்குத் தேவையுள்ள அனுதாபத்தை அவளுடைய தாய்த்தன்மை கொடுக்கவல்லது. அவர் வன்மை கெட்ட நேரத்தில் அதை உண்டாக்க அவளால் முடியும். இப்படி அவருக்கு அவள் உதவுவதைக் கடகக்காரர் குறைநினைக்க மாட்டார். அவளுடைய உதவியாலும் உந்துதலாலும் அவர் தன்னுடைய தொழிலில் முன்னேற முடியும்.

இருவரும் வேறு வேறு திசைகளிலுள்ளவர்களானாலும் கடின உழைப்பாலும், வயது முதிர்ச்சியாலும் உறவு முன்னேறலாம். சாயந்திரம் நடந்த நிகழ்ச்சிகள் இவரது பால் உணர்வுகளை தாக்கலாம். சந்தோஷமின்மை நடந்திருந்தால் அவரால் அவளுடன் இன்பம் காண முடியாது. அவரை அவள் கொடுமைப் படுத்தினால் இருவருக்குமிடையில் எதிர்ப்புச் சுவர் ஒன்று உருவாகும்.

இந்த உறவு விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையிருந்தால் நன்றாகும்.

# இலங்கைச் சோதிட ஆய்வு மன்றம்

மேற்படி மன்றத்தின் வைகாசி மாதக் கூட்டம் 27-5-84ல் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மாலை 3-15க்கு திரு செ. ந. நடராஜன் தலைமையில் ஆரம்பமாயிற்று. அன்று சிறப்புப் பேச்சாளராக திரு மு. மு. மார்க்கண்டு நட்சத்திர ரீதியில் எண் சோதிடம் பற்றி பேசினர். கிரக நிலைகளைக் கொண்டும், கைரேகையைக் கொண்டும் சோதிடம் கூறுவது போல் எண்ணைக் கொண்டும் பலன் கூறலாம் என்று சொன்னர். சோதிடத்தில் துர்ப்பலன்களுக்கு பிரீதி செய்வது போல் எண் சோதிடத்திலும் பெயர் மாற்றத்தால் பிரீதி உண்டென்று கூறினர். கிரகங்களுக்கு எண்ணைக் கொடுக்கும்போது பல முறைகளைக் கையாண்டுள்ளார்கள். பண்டிற் சேதுராமன் தெசை புத்தி நிரைப்படி கிரகங்களுக்கு எண்ணை அமைத்திருக்கிறர். பண்டிதர் நவரத்தினம் அவர்கள் கிழமை நாட்கள் நிரைப்படி எண்ணை கிரகங்களுக்கு கொடுத்திருக்கிறர். பலாஜோசியர் இராசிப்படி எண்ணைக் கொடுத்திருக்கிறர். ஆனல் இவற்றில் எல்லாமிருந்து மாறுபாடானது எனது முறை என்றர். இந்த முறை நட்சத்திர ராசியடிப்படையிலானதாகும். 27 நட்சத்திரத்திற்கும் ஒன்றுக்கு 4 பாதப்படி 108 பாதங்கள் உண்டு. இந்த 108 பாதங்களும் 12 இராசிக்குள் அடங்கும். இராசிக்கு 9 பாதப்படி 12 இராசிக்கும் 108 பாதங்களாகும். இதன்படி மேடராசியில் அச்சுவினி 1-ம் பாதம் வரும். 2-ம் பாதம் இடபத்தில், 3-ம் பாதம் மிதுனத்தில் 4-ம் பாதம் கடகத்தில் பரணியின் 1-ம் பாதம் சிங்கத்தில் இதை 5-ம் பாதமாகவும் அந்த வரிசையில் கன்னியில் 6-ம் பாதம் துலாத்தில் 7-ம் பாதம் விருச்சிகத்தில் 8-ம் பாதம் (அதாவது பரணி 4-ம் பாதம்) தனுவில் கார்த்திகை 1 அல்லது 9-ம் பாதம். மகரத்தில் 10-ம் பாதம். கும்பத்தில் 11-ம் பாதம் மீனத்தில் 12-ம் பாதம். (அதாவது கார்த்திகை) இப்படியே 108 பாதங்கள் இராசி, நட்சத்திரபாத முறையில் அமையும். 1,13,25,37 49,61,73,85, 97 எண்கள் மேடத்தில் அமையும். அதேபோல் ஒவ்வொரு இராசிக்கும் 9 விதமான எண்கள் அமையும். 1,10,19,28,37,46,55,64,73,82,91, 100 ஒரே இ[illegible]க்கமாகிய 1ஐக் குறித்தாலும் இருநபர்களுக்கி[illegible]யே இந்த எண்கள் விழும் இராசி மாறுபடுவதால் குணங்கள் பலன்கள் எல்லாம் வித்தியாசப்படுவதைக் காணலாம். ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் ஒரே எண்ணானும் பலன் வேறுபடும். சர, ஸ்திர, உபய வீடுகளில் அமையும் எண்களுக்கு விதம்விதமான பலன் ஏற்படும். விவாகம், புத்திரபாக்கியம் இன்னும் பல வற்றிற்கும் தன்னுடைய எண் ரீதியில் ஒருகாலமும் பலன் பிழையாகாது என்று கூறிமுடித்தார்.

பின்பு கலந்துரையாடலில் திரு. சாம்பசிவம் செ. நடராஜன், சிவஞானசம்பந்தன், சின்னத்துரை கலந்துகொண்டனர். தனக்கே குறைபாடு உள்ள ஒரு எண்சோதிடர் பெரிய பிரபல்யமாக பத்திரிகைக்கு விஷயதானம் செய்பவர் தனது எண் சோதிட மூலம் தனது குறையை போக்க முடியாதவர் ஊருக்கு உபதேசம் செய்கிறர். எண் பெயர் மாற்றங்களால் அதோடு தொழிலை வியாபாரத்தை முன்னேற்றுவதற்கு நல்ல எண் திகதியில் தொடங்கக் கூடியதை அவர் தொடங்கி அவ்வியாபாரமும் இப்போ இறந்துவிட்டது. இன்னுமொரு எண் சோதிடர் தமது உறவினருக்கு விவாக நிச்சயதார்த்தம், பொருத்தம், விவாகம் எல்லாம் தன் எண்சோதிடப்படி செய்து அந்தத் தம்பதிகள் இப்போ கோட்டடியில் விவாக ரத்து வழக்கில் நிற்கிறர்கள். ஆதலால் இவர்களுடைய எண் சோதிடம் ஒரு ஆதாரமில்லாதது. ஆனல் திரு மார்க்கண்டுவின் முறையோ நமது முனிவர்கள் வகுத்த முறைகொண்டது. எல்லா எண்களும் 9க்குள் அடக்கம். எமது சமய ரீதிப்படி எது செய்யினும் 3 முறை செய்தல் - இராசிச்சக்கரத்தில் நவாம்சமும் இல்லாவிட்டால் அது பூர்த்தியில்லை. மந்திரங்களை ஜெபிப்பது 108 தரம் அல்லது 1008 தரம். இவை எல்லாம் 9தே. 28 நட்சத்திரங்களிருந்தும் 27 நட்சத்திரத்தையே கைக்கொள்கிறேம். ஏன்? 9 எண்ணுகிறபடியால். அதே போல் நமது முனிவர்களும் 9 கிரகத்தையே கையாண்டுளர். புதிய கிரகங்களை அவர்கள் கையாளவில்லை, என்று திரு. சின்னத்துரை மார்க்கண்டுவின் முறையை வியந்து பாராட்டினர். அதோடு திரு. சேஷாத்திரி ஐயர் இந்த முறையை தமது New Technique of Prediction என்னும் நூலில் Mathematical Navamsa Division என்னும் பகுதியில் மிகு விபரமாக கூறியிருக்கிறர். ஆனல் அவர் எண்சோதிடத்தைப் புகுத்தவில்லை. என்று சின்னத்துரை கூறினர். தலைவரின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவேறியது.

அடுத்த கூட்டத்தில் நல்லூர் கோவில் புவனேகபாகு பற்றியும், கெசாபுத்தி பலன்கள் பற்றியும் சிறப்புரைகள் நிகழும்.

# ஆய்வு மன்றம்

செல்வி. கமலராணி வல்லிபுரம்,
ஐயனார் வீதி, பருத்தித்துறை.

இலக்கினம் முதலாக எண்ணப்படுவதுதான் 7ம் வீடும். உமது சாதகத்தில் 7ம் வீட்டில் கேது பகவான் இருக்கிறார்.

S. கருணாமூர்த்தி, 79, N. P. ராஜா அன் கோ,
ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.

சாதகம் கணித்துப் பலன் விளக்கம் கொடுப்பதற்கு இப்பகுதியில் இடம் போதாதென்பதை மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றோம். தரமான கணித சோதிடருடன் தொடர்பு கொண்டு உமக்குத் தேவையான சாதக நகலைக் கணிப்பித்து பலன்களை அறியுமாறு ஆலோசனை கூறுகின்றோம்.

ரஜனி ஐயாபிள்ளை பொலிகண்டி மேற்கு, வல்வை.

தெய்வ பக்தி - குரு பக்தி முதலான பக்தி சிரத்தையுடன் முயற்சி செய்தால் உமது எண்ணம் நிச்சயமாக நிறைவு பெறும்.

ச.வசந்தமலர், 28/1 தாமரைக்கேணி, மட்டுநகர்.

''தோல்விகள் வெற்றிக்கு முதற்படி'' என்பது ஆன்றோர் கொள்கை. மனம் தளர வேண்டாம். இலக்கினம் 10-ம் அதிபர்களின் பரிவர்த்தன மகா யோகம் முதலான பல யோகங்கள் உமது சாதகத்தில் காணப்படுகின்றன. மாதா - பிதா - பதி உட்படத் தெய்வபக்தியுடன் மன உறுதியாகச் செய்வன திருந்தச் செய்ய தொழில் சித்தியும், வாழ்வில் முன்னேற்றமும் விரைவில் கிட்டும்.

த. ஜெயா, திருக்கோணமலை.

சாதகத்தின்படி தெய்வ அனுகூலமும் உண்டாயின், கடின முயற்சியால் இராகு தசை சுக்கிர புத்தியில் விவாகசித்தி ஏற்படவும் கூடும்.

சி. சுந்தரலிங்கம், உப்புவெளி-திருகோணமலை.

விண்ணப்பப் படிவத்தில் சாதகர் பிறந்த இடம், காலம், நேரம் குறிப்பிடாமல் பலன்கூற முடியாதே!

K. சந்திரசேகரன் 17 ஜம்பட்டாவீதி, கொழும்பு 13

நீர் குறிப்பிட்ட நேரத்தில் சென்ன நட்சத்திரம் ரேவதியாக இருக்கவேண்டும். ரேவதிக்குப் புதன்தசை நிகழவேண்டும். செனனகாலம் புதன் தசையாயின் தற்சமயம் சுக்கிரன் தசையில் சந்திரபுத்தி முடிந்துவிட்டதே.

இ. பவானி - சாம்பல்தீவு

எண்ணெய் - இயந்திரம் - இரசாயனம் - கிருஷிகம் இவற்றுடன் சம்பந்தப்பட்ட ஏதாவதொரு தொழிற்துறையால் உமது சீவியம் அமையலாம்.

த. சிவசம்பு, 1வது யூனிற் - கல்மடு
இலுப்பைக்குளம் - வவுனியா.

உமது பிறந்த திகதி 1925 செப்டெம்பர் 18க்குச் சரியான குரோதன வருடம் புரட்டாதி மாதம் 3ம் திகதி வெள்ளிக்கிழமை காலை ('?') நேரம் ஆகும். தற்சமயம் ஏழரைச் சனியின் கோசாரமும் நிகழுவதால் பலன் சாதகமாக அமையாது தானே!

பி. பசுபதி, சுன்னாகம் மேற்கு.

உமது சாதகத்தில் 11ம் 12ம் அதிபர்களான சனி, குருவின் பரிவர்த்தனம் ''தைத்திய'' யோகமாகும். இதுவும் ஒரு அவயோகமாகும் என்று பலதீபிகையில் விபரிக்கப்பட்டுள்ளதே!

S. மகுறூப், 54. நாவலர் வீதி - யாழ்ப்பாணம்.

இறைபக்தியும் முயற்சியும் வெகு விரைவில் சொந்தத் தொழிலில் முன்னேற உதவும் என்று நவநாயகர்கள் உமக்குக் கூறுகிறார்களே.

செல்வி. இந்திராதேவி இராசநாயகம்,
புலோலி கிழக்கு பருத்தித்துறை.

வங்கிச்சேவை, வியாபாரம், அலங்கார வேலைப் பகுதி, சங்கீத நாட்டியத்துறை, கலைத்துறை, ஆசிரியர் சேவை ஆகியவற்றில் ஏதாவதொரு துறையில் சம்பந்தப்பட்ட தொழில்துறைச் சீவனம் உமக்கு அமைய வேண்டும்.

ச. தயாபரன், இல 77. முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

சனி மகா தசைக்குக் குரு க[illegible]களுகலின்-சனி தசை குருபுக்தி நிகழும்போது [illegible]ய்வ அருளும் கூடி வரின் விவாகசித்தியும் நிகழலாம்தானே!

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 26

### முதலாம் பரிசு ரூ. 50/-

**போட்டி நிபந்தனைகள்**

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்
2. 1-7-1984க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்ருவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனும்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

குறுக்கெழுத்துப் போட்டி இல. 26
சோதிடமலர்
மட்டுவில் — சாவகச்சேரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வா 1 | 2 | வெ 3 | 4 | 5 | |
| 7 | | 9 | 10 | ம் 11 | 12 |
| வி 13 | 14 | 15 | | 17 | 18 |
| 19 | கு 20 | 21 | | 23 | ர 24 |
| | 26 | | 28 | | 30 |
| 31 | ன் 32 | 33 | 34 | 35 | இ 36 |

பெயர் ..................................................

விலாசம் ..................................................

..................................................

**இடமிருந்து வலம்:**

1. ஆகாயத்தில் இதன் தோற்றம் ஏற்படின் உலகில் பல்வேறு அனர்த்தங்கள் விளையும் என மக்கள் எண்ணுகின்றனர்.
9. குற்றம் பார்க்கில் இது இல்லை.குழம்பியுள்ளது
13. கோண அளவீடுகளில் கலையொன்றின் 1/60 பங்கு இது.
17. இறுதி எழுத்து விடுபட்டுள்ள இவ்விராசியில் புதன் ஆட்சி, உச்சம், மூலத்திரிகோணம் ஆகிய மூன்று நிலைகளையும் அடைகிறது.
19. குழம்பியுள்ள இது குற்றெழுத்தைக் குறிக்கும்
23. நட்சத்திரமொன்றையும் ஓர் வகைப் பிரபந்தத்தையும் குறிக்கும் இதன் கடை எழுத்து தவறிவிட்டது.
31. அட்டதிக்குப் பாலகர்களில் 'அக்கினி'க்குரிய திக்கு குழம்பியுள்ளது.

**மேலிருந்து கீழ்:**

1. மழைகாலங்களில் வானில் தோன்றும் இதில் ஏழு நிறங்களுண்டு.
3. இறுதி இரு எழுத்துக்களை இடம் மாற்றின் மங்கல கருமங்களுக்குப் பயன்படும் இலையொன்றுகிடைக்கும்.
4. "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்பதில் வரும் இரண்டு இதனைக் குறிக்கும். முதலெழுத்து நீங்கி தலைகீழாகவுள்ளது.
5. ஒரின ஆடுகளின் உரோமத்திலிருந்து பெறப்படும் ஆடைவகை குழம்பியுள்ளது.
12. மகர கும்ப லக்னகாரருக்கு இவரது தசை காலம் யோகத்தைக் கொடுக்கும். குழம்பியுள்ளது.
14. ராகு காலம் போல் மாறியுள்ள இதற்கும் ஒவ்வோர் நாளும் குறித்த காலமுண்டு. இக்காலம் சுபகருமங்களுக்கு ஏற்றது.
28. "...... பார்த்தால் கோடி தோஷம் நீங்கும்" என்பர். தலைகீழாகவுள்ளது.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 25-ன் விடைகள்**

இடமிருந்து வலம்:

1. வக்கிரகதி 9. கிழக்கு 13. மைசூர்
17. ருது 19. பிரி 22. கைம்மா
25. இறைவன் 32. பராயம்

மேலிருந்து கீழ்:

1. வளர்பிறை 3. கிழமை 4. ரகு
5. துக்கம் 6. கிருத்திகை 14. சூரியன்
22. இராமா 27. பவ(ம்)

பரிசு பெறுவோர்:

1ம் பரிசு: பா. கோபாலகிருஷ்ண சர்மா, கந்தசுவாமி கோவில் - கிளிநொச்சி.

2ம் பரிசு: மாணிக்கவாசகர் சிவலோகநாதன், சிவன் கோவில் வீதி - சாவகச்சேரி,

3ம் பரிசு: செல்வி. தம்பிராஜா அருந்ததி, காளிகோவில் வீதி, புதுக்குடியிருப்பு - வாழைச்சேனை.

Registered as a News Paper at the G. P. O. Sri Lanka.

அபிவிருத்திப் பாதையில்,.........
யாழ்ப்பாணத்து நீர்வளம் குளங்களில் தங்கியுள்ளது.
காலந்தோறும் குளங்களை ஆழமாக்குவோம்
குளங்களில் அதிகளவு நீரைத் தேக்குவோம்
குளத்துநீர் பெருக்கால் கிணற்று நீரைப் பெருக்குவோம்
யாழ்ப்பாணத்து மூலவளம் பனைவளம் என்போம்
பனையை அதிகமாக வளர்த்துப் பயன் பல பெறுவோம்
வீதியோரங்களில் நிழல்மரம் நடுவோம்
வீட்டுத் தேவைக்கு எலுமிச்சை, தோடை நடுவோம்
விறகுத் தேவைக்கு சவுக்குமரம் உண்டாக்குவோம்
தென்னந்தும்பு பனந்தும்பு பயன்தர வழி செய்வோம்.

★ குளம் தோண்டல் ★ மரம் நடுதல் ★ பனை அபிவிருத்தி

என்பனவற்றிற்கு மில்க்வைற் தொழிலகம் உதவும்.

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை சேகரித்து கொடுத்து பரிசுகளைப் பெறவும்.

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233

## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்,

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொருவரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | | வருட சந்தா | ரூ 40-80 |
| | வெளிநாட்டுக்கு | (கப்பல்வழி) | வருட சந்தா | ,, 78-00 |
| | மலேசியா | (விமான வழி) | வருட சந்தா | ,, 150-00 |
| | இங்கிலாந்து | (விமான வழி) | வருட சந்தா | ,, 175-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 3-40 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், [illegible]சோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280